SOUTHALL SHUTTERS (NATIONWIDE)
Shop Front - Roller Shutter - Glass
*Shop Shutters * Remote Control Garage Shutters
*Van Shutters *Door Closers *Industrial Shutters
SALES - SERVICE - REPAIR
LEICHESTER - LONDON - BIRMINGHAM
Tel. Head Office: 020 8843 2235

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

TV
+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk | UN-37 April, 2004 | For News & Advertising: 020 8952 5677 | 16 பக்கங்கள்

# தமிழ் இளைஞர்களை மெற் பொலிசில் சேர்க்க தீவிர முயற்சி

மெற்றோ பொலிட்டன் பொலிசில் தமிழ் இளைஞர்களைச் சேர்க்க தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இது சம்பந்தமான கலந்துரையாடல் மெற்றோபொலிட்டன் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது. பொலிஸ் ஆட்சேர்ப்புப் பிரிவில் இருந்து Ch Insp David Stone கலந்து கொண்டார். இவர் Positive Action Team க்கு பொறுப்பானவர். தற்போது காவல்துறையினரில் 15 வீதமானவர்களே சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இவ்வெண்ணிக்கையை அதிகரிப்பதில் தற்போது தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. தமிழ் இளைஞர்களும் மெற் சீருடையுடன் இலண்டன் வீதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

பொலிஸிற்கு ஆட்சேர்ப்பில் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களே முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும் தமிழ் விளையாட்டு நிகழ்ச்சிகளையும் மெற் பொலிசார் ஸ்பொன்சர் செய்து வருகின்றனர்.

மொழித் திறமை ஆட்சேர்ப்பில் முக்கிய பிரச்சினையாக உள்ளது எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. பேச்சு மற்றும் எழுத்து இரண்டுமே தரமானதாக இருப்பது அவசியமாக உள்ளது. அடுத்து பாதுகாப்பு சம்பந்தமான ஆய்வுகளும் பிரச்சினையாக உள்ளது. பெற்றோர் பொலிசில் சேர்வதை ஊக்குவிப்பது இல்லை என்பது தமிழ் இளைஞர்கள் மத்தியில் உள்ள பிரச்சினையாக இருப்பதாக அங்கு சமூகமளித்து இருந்த Brent's Volunteer Police Cadetsச் சேர்ந்த இளைஞர்கள் தெரிவித்து இருந்தனர். தாங்கள் பொலிஸில் சேர்ந்த பணியாற்ற ஆர்வமாக இருப்பதாகவும் அதற்கான ஆதரவும் ஒத்துழைப்பும் குடும்பத்தில் இருந்து கிடைப்பதில்லை எனவும் அவர்கள் வருத்தம் தெரிவித்தனர். தாங்கள் இந்தப் படைப்பிரிவில் இணைய குடும்பத்தாருடன் மிகவும் போராடியதாகவும் தொடர்ந்தும் போராடி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமிழ் மக்கள் மத்தியில் பொலிஸ் பற்றி உள்ள எதிர்மறையான சிந்தனை முறையில் மாற்றத்தை ஏற்படுத்த ஊடகங்கள் முன் வரவேண்டும் எனவும் தேவைப்படும் பட்சத்தில் இளைஞர்களின் பெற்றோர்களைத் தாம் சென்று சந்திக்கவும் தயாராக இருப்பதாகவும் Ch Insp David Stone தெரிவித்தார்.

பொலிஸில் சேர்வதனால் கிடைக்கும் நல்ல அம்சங்களை இளைஞர்களுக்கும் பெற்றொர்களுக்கும் தெரியப்படுத்தி தமிழர்கள் பலரை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என அங்கு கேட்டுக் கொள்ளப்பட்டது. தொழில்ரீதியாக உயர்ந்து செல்வது, பல்கலைக் கழக உயர்கல்வியைத் தொடர முடியாதவர்களுக்கு இது ஒரு நல்லவாய்ப்பாக இருப்பது, சமூகத்துக்கு மிகுந்த சேவையைச் செய்த திருப்தி போன்ற நல்ல அம்சங்களை மக்களிடம் கொண்டு சென்று பொலிசில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அனைவரும் உதவ வேண்டும் என Ch Insp David Stone கேட்டுக் கொண்டார்.

## தமிழ் மக்கள் மத்தியில் பொலிஸ் கருத்துக்கணிப்பு

தமிழ் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பிரேசன் என்வர் கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்பட்டு உள்ளது. பயமுறுத்தும் அல்லது மிரட்டும் வகையில் நடந்து கொள்வது (intinidation), களவு, தனிப்பட்ட தாக்குதல்கள், தெருச்சண்டைகள், அயலவர்களுடனான சண்டைகள் இனவாதத் தாக்குதல்கள் போன்ற குற்றச் செயல்கள் தமிழ் மக்களால் பெருமளவில் அடையாளம் காணப்பட்டு உள்ளது. இதற்கு வீதிகளில் உலாவும் பொலிசாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேணடி உள்ளது.

தமிழ் சமூகத்துடன் பொலிசார் புரிந்துணர்வுடன் செயற்படுவதாக கருத்துக் கணிப்பில் பங்கெடுத்தவர்கள் தெரிவித்து உள்ளனர். தமிழ் மக்கள் பொலிசாரை நம்புவதுடன் பொலிசார் தமிழ் சமூகத்தை பாதுகாக்கிறார்கள் எனவும் கருத்தக்கணிப்பு தெரிவிக்கிறது. கருத்துக்கணிப்பில் பங்கெடுத்தவர்களில் 50 வீதமானவர்கள் ஒப்பிரேசன் என்வரைப் பற்றி அறிந்துள்ளனர். மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு உள்ளதை இது காட்டுகிறது. ஒப்பிரேசன் என்வர் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் அவசியத்தை மக்கள் தெரியப்படுத்தி உள்ளனர். ஒப்பிரேசன் என்வர் தமது உள்ளூர் வாழ்விடத்தை பாதுகாப்பானதாக ஆக்கி உள்ளதாக பலர் தெரிவித்து உள்ளனர். பொலிசார் தமிழர்களுடன் கணிசமான தொடர்புகளைக் கொண்டிருப்பதாகவும் தமிழ் மக்கள் நம்புகின்றனர் என அக்கணிப்பு தெரிவிக்கிறது.

கருத்துக் கணிப்பில் பங்கெடுத்தவர்களில் 50 வீதமானவர்கள் பயமுறுத்தல்கள், மிரட்டல்கள், குழுவன்முறை ஆகிய குற்றங்களால் பாதிக்கப்பட்டு உள்ளனர். அதனால் பொருளாதார இழப்புகளையும் அவர்கள் சந்தித்து உள்ளனர். ஆனால் பாதிக்கப்பட்டவர்களில் 50 வீதமானவர்களே சம்பவத்தை பொலிஸில் பதிவு செய்து உள்ளனர். தாங்கள் இவற்றில் தொடர்புபடுத்தப்படுவதை விரும்பாததாலேயே பெரும்பாலும் இக்குற்றங்களை பதிவு செய்யவில்லை என கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. குற்றவாளிகளுக்கு பயந்தும் பலர் குற்றங்களை பதிவு செய்யவில்லை. பொலிசார் இனவாதமாகச்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

UDHAYAN
for your cost
effective ADVT.

CINNAMON
Sri Lankan, Indian & Pakistani Cuisine
Daily 12 - 11:30 pm
* Catered for all occassions
* 10% Discount over £13.50 (Take-away only)
* Free delivery within 5 miles
* Sunday Buffet £5.99 (Eat-in)
* 100 String Hoopers £1650 only
020 8861 6363
34, High Street, Wealdstone, Harrow, Middx.

UDHAYA Stores & PHOTOLAB
* FREE FILM ON CD AGFA
* Cheaper than anywhere in Hayes
* 20% Discount for 3 or more films
* Special Rate Outdoor Filming
Most Sri lankan foods in Hayes at Special Price
Call 020 8573 5395
1100 Uxbridge Road, Hayes, Middx.

Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

Locall Telecom
Home & Business pre-paid Accounts
It's the same rate even from your mobile phone
USA 2p
Canada 2p
Sri Lanka 12p
France 2.5p
Kenya 14p
Call us for more fantastic offers
020 8933 2199
www.locall-ltd.com

Creative Curtains (LONDON) Ltd.
Made to Measure Service for Curtains & Blinds
Contact Dee Dee
Tel: 020 8574 2156
Mobile: 07780 572 429
15 Witley Ind. Est. Witley Gardens,
Southall UB2 4EZ

Craz'zy Prices
Trade Discount Warehouse
MS Mastersupplies
DS Directsupplies
MF Marblesfirst
Kitchens, Bathrooms, Wooden flooring
Tiles, Bedrooms, Showers, Marble
Tel: 0208 961 7003 Fax: 0208 961 7030
Unit: 21/22/25 Cumberland Business Park, Cumberland Avenue, Park Royal (off Abbey Road) London NW10 7RT
WWW.Matersupplies.com
Email: Info@mastersupplies.com

C & S Builders Merchants (Stamford Hill) Ltd.
NEW SUPER STORES over 1 acre site
SKIPS FOR HIRE
MANY OPENING SPECIAL OFFERS IN WALTHAMSTOW
OPEN 7 DAYS A WEEKS Call: 020 8498 2000
C & S HOUSE: 151, Blackhorse lane, London E17 5QU, Tel: 020 8498 2000
276-286 Stamford Hill, London N16 6TY, Tel: 020 8809 5373
122-126 Grove Green Road, London E11 4EL, Tel: 020 8539 2391
E-mail: sales@csbuildersmerchants.co.uk www.csbuildersmerchants.co.uk
Also at LEYTON & STAMFORDHILL

Man & Co Estate Agents
SALES - LETTINGS - MANAGEMENT - FINANCIAL SERVICES
3 Fryent Way, Kingsbury, London NW9 9ER
Tel: 020 8206 9930 Fax: 020 8206 9931
Web: www.manandco.co.uk
Email: info@manandco.co.uk
NAEA
your property is at risk if you do not keep up with the repayment or other loans secured on it, writen details on request. *All loans subject to status
Future Finance
020 8206 9939
In-House experienced financial advisors
Specialists in residential mortgages
True Self-Cert and Non-Status mortgages
Exclusive mortgage rates
Specialists in adverse credit advice (CCJs, Arrears, Defaults)
Commercial Loans*

CURRENT AFFAIRS

The UDHAYAN
உதயன்
ADVERTISE
FOR BEST RESULTS
020 8952 5677

SAVE £££ POUNDS ON TUTION FEES
*Verbal & Non-Verbal Questions on Interactive CD*
OVER 2000 QUESTIONS for Grammar & Independent School
Entries on interactive CD
Cost £25 includes p&p.
Send cheques or postal orders to:
SCHOOLMATHSCLUB LTD.
BCM 4300
LONDON WC1N 3XX
Website: www.schoolmathsclub.com

ATC
ACTON TRAINING CENTRE
FREE TRAINING
for people who live or work in West London
Do you know anyone who needs help with the following:
ENGLISH (ESOL)
LITERACY
NUMERACY
IT COMPUTER SKILLS
NVQ certificate in IT
Tel: 020 8992 4144
email: info@atc-uk.com
Swan House, 296 High Street, Uxbridge Road, Acton, London W3 9BJ
Part Funded by European Union through the European Social Fund

Restaurant
FOR SALE
Restaurant with full on licence
Next to Tube Station
Within residential area
V.good location
Long Lease
CALL TONI 07973 503836

NEWS AGENT SHOP
FOR SALE
* Long Lease (Renewable)
* Turnover £4000 per/week
* Plus Bus Pass £1200 per week
* Can change into Off-Licence
Interested ? CALL
SIVA on
07958 790235

New London College
Learn English, IT, Basic & Business Computing, Accounting, Book-Keeping, Business, Management
at
New London College, Hounslow
(opp. Hounslow West Tube Station)
Day, Evening & Weekend Classes.
Teaching by experienced faculty with high standards of syllabus.
Career Development Programs & Workshops
Motivation, Communication & Presentation Skills, Negotiating Skills, Leadership Skills, Time, Stress & Crisis Management
for further information Call: 020 8570 7766
or visit www.newlondoncollege.co.uk
1 Martindale Road, Hounslow West TW4 7EW
(opposite Hounslow West Tube Station)

1ம் பக்கத் தொடர்ச்சி...

செயற்படுவார்கள் எனவும் சிலர் தெரிவித்து உள்ளனர்.

மேற்படி கருத்துக் கணிப்பின் மூலம் தமிழ் சமூகம் பற்றியும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் பொலிசார் ஓரளவு கற்று உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். எதிர்காலத்தில் தமிழ் சமூகத்தில் எப்படி பொலிஸ் நடவடிக்கைகளை மேற்கொள்வது தமிழ் சமூக அமைப்புகளுடன் தொடர்புகளை வளர்த்துக் கொள்வது போன்ற விடயங்களில் தாங்கள் அக்கறையாக இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இலண்டனில் உள்ள 11 உள்ளாட்சி மன்றப் பிரிவுகளில் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. 1,500 கருத்துக் கணிப்புப் படிவங்கள் பெரும்பாலும் ஆலயங்களினூடாக விநியோகிக்ககப்பட்டது. ஆனால் 7 வீதமான படிவங்கள், 98 படிவங்கள் மட்டுமே திருப்பிப் பெறப்பட்டது. வடக்கு இலண்டனில் இருந்தே படிவங்கள் பெரும்பாலும் மீளக் கிடைத்து உள்ளது.

# Tamil Crime Hotline

## தமிழ் குற்றப்பிரிவு தொடர்பு இலக்கமும்-பொலீஸ் நடவடிக்கையும்

தமிழ் சமூகத்திடையே பூதாகாரமாகி வரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த மெற்றோ பொலிட்டன் பொலீசார் மற்றுமொரு நடவடிக்கையில் இறங்கி உள்ளனர். தமிழ் குற்றப்பிரிவு தொடர்பு இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தி அதனை பிரபல்யமாக்க உள்ளனர். தமிழ் மக்களுக்கும் பொலிசாருக்கும் தொடர்புகளை வலுப்படுத்தி தமிழ் மக்களிடையே வன்முறையில் ஈடுபட்டு உள்ளவர்களை இனம் காண்பதே இதன் முக்கிய நோக்கமாக உள்ளது. இவ்விலக்கத்தை விளம்பரப்படுத்தும் நடவடிக்கைகள் மே முற்பகுதியில் இடம்பெற உள்ளது.

Tamil Crime Hotline என்று அழைக்கப்பட உள்ள இவ்விலக்கம் தமிழ் இளைஞர்களிடையே உள்ள வன்முறையைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்காற்ற உள்ளது. முன்னரைக் காட்டிலும் பொலிசார் வன்முறையார்களைப் பற்றிய தகவல்களை சேகரிப்பதில் பலமடங்கு முன்னேறி உள்ளனர். Tmil Hotline மூலம் அவர்கள் பெற்ற அனுபவத்தையும் அனுகூலத்தையும் பயன்படுத்தி Tamil Crime Hotline உருவாக்கப்பட்டு உள்ளது.

குற்றவாளிகள் எனக் கருதுவோர் பற்றிய தகவல்களை இவ்விலக்கத்துடன் தொடர்பு கொண்டு வழங்கலாம். இதில் தகவல்களைக் கொடுப்பவர் தன்னை வெளிக்காட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. 'ஒரு அழைப்பு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்' என்ற கோசத்துடன் இந்த Tamil Crime Hotline இலக்கம் விளம்பரப்படுத்தப்பட உள்ளது. One call can make a lot of difference. Which one you have to decide. Call this number, it will save your breath. என்ற ஆங்கில வாசகங்கள் இவ்விலக்கத்தை விளம்பரப்படுத்தப் பயன்படுத்தப்பட உள்ளது.

# உதயன் பற்றி...

கடந்த 8 வருடங்களாக வெளிவரும்; அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்ட; தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை உதயன். தமிழ் சமுதாயத்திற்கு பயன் உள்ள வகையில் சமூக நோக்குடன் தேசிய அளவில் வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஒரே தேசிய பிரித்தானிய செய்தி தமிழ் பத்திரிக்கை பற்றி உங்களுக்கு...

பல்லாயிரம் வாசகர்களின் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்ற உதயனை இலவசமாக வாசிக்க அளிப்பவர்கள்:



டாக்டர். இரவிக்குமார் (சற்குரு சுவாமிகள்)
நிறுவனர்-ஆசிரியர்



அன்னை காயத்ரி
நிறுவனர்-துணை ஆசிரியர்



திரு.த.புஷ்பலிங்கம்
விளம்பர பொறுப்பாளர்



திரு.த.ஜெயபாலன்
தலைமை நிருபர்



ர கொன்ஸன்ரைன்
செய்தி ஆய்வு நிருபர்

துணை நிருபர்கள் :
கே அரவிந்தன் (இலண்டன்)
ஜெ வெற்றிச்செல்வன் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கெ பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

மற்றும் :
புலனாய்வு நிருபர்கள், விநியோகஸ்தர்கள்

உதயன் : அதிக பிரதிகளை பிரசுரிக்கும் பரந்த விநியோகத்தைக் கொண்ட தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிக்கை.

தொடர்புகளுக்கு: Global News Media **GNM (PVT) LTD.**, 25-27 High St., Edgware, Middx. HA8 7EE **Tel: 020 8952 5677**

**உதயன் நடுநிலைமையை கொண்ட மக்களின் நண்பன். உதயன் எப்பொழுதும் உண்மைகளை மட்டுமே ஒருசார்பற்றமுறையில் பேதமின்றி உண்மைகளை வெளியிடும் ஒரே பத்திரிக்கை.**

# கவுன்சிலோவில் சிறுவர் கலை விழா

சிறுவர்களுக்கு சிறுவர் என்ற கலை விழா கவுன்சிலோவில் ஏப்பிரல் 24ல் இடம்பெற்றது. தமிழ் மகளீர மன்றம் பாரதி தமிழ் பள்ளியின் அனுசரனையுடன் இவ்விழாவை ஒழுங்குபடுத்தி இருந்தது. இந்நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி சிறப்புடன் வழங்குவதில் பாரதி தமிழ் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மகளீர மன்றத்தினர் ஆர்வத்துடன் செயற்பட்டனர். முற்றிலும் சிறார்களின் வளர்ச்சியுடன் தொடர்புடையதாக பல்சுவை விருந்தாகவும் கூடும் ஒன்று கூடலாகவும் இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது. இதனை தென்னிந்திய சினிமா ஒளிப்பதிவாளர் சி பி மதன் தேவா ஒளிப்பதிவு செய்தார். Mal's Film Media என்ற நிறுவனத்தின் சார்பில் மதன் தேவா ஒளிப்பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்ட உள்ளார்.

மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இவ்விழாவில் தமிழ்த் தாய் வாழ்த்து முதலாவது நிகழ்ச்சியாக அமைந்தது. மாதா பிதா குரு தெய்வம் என்ற தலைப்பில் பேச்சு, பரதநாட்டியம், பச்சைப்பாற்கட்டி, எமது பெரியார் பேச்சு, அபிநய நடனம் என்பன இடைவேளைக்கு முன்னர் இடம்பெற்றது. சங்கீதாலயாவின் வாத்தியவிருந்து, Child to Child உரை நிறப்பிரிகை குறும்பட விமர்சனம், சிறுவர் உலகம் பற்றிய பேச்சு, பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் இடைவேளையை அடுத்து நடைபெற்றது. நிகழ்ச்சியின் முடிவாக பரிசளிப்பு இடம்பெற்றது.

இலங்கையில் உள்ள சிறுவர்களுக்கும் மேலைத்தேய நாடுகளில் உள்ள சிறுவர்களுக்கும் இடையே பிணைப்பை ஏற்படுத்துவது, புதிய சிநேகிதத்தை வளர்ப்பது, கருத்து மாற்றம் கேள்வி இவைமூலம் பாரம்பரிய பண்புகளை ஆராய்வது, நன்நடத்தையைச் செம்மைப்படுத்தி அனுகூலப்படுத்துவது ஆகியவை சிறுவர்களுக்கு சிறுவர் என்ற செயற்திட்டத்தின் நோக்கமாகும். சிறுவர்களால் செயற்படுத்தப்படும் இச்செயற்திட்டத்திற்கு பெரியவர்கள் ஆதரவாக உள்ளனர்.

# "கனவுகள் நிஜமானால்" படப்பிடிப்புகள் நிறைவு

புதியவனின் 'கனவுகள் நிஜமானால்' படத்தின் படப்பிடிப்புகள் பெருமளவில் பூர்த்தி அடைந்து உள்ளது. வோல்தம்ஸ்ரோ தமிழ் சங்கப் தமிழ் பள்ளியின் அதிபர் குகச்சந்திரனின் ஒத்துழைப்புடன் மார்ச் 27ல் சில காட்சிகள் பதிவு செய்யப்பட்டது. மற்றுமொரு காட்சி ஸ்கொட்லன்டில் பதிவு செய்யப்பட்டது. படத்தின் பெருமளவு காட்சிகள் தெற்கு இலண்டனில் பதிவாக்கப்பட்டு உள்ளது.

'மாற்று' படத்தை முதல் முயற்சியாகத் இயக்கிய புதியவனின், அதில் பெற்ற அனுபவத்தடன் இப்படத்தை இயக்குவதாகத் தெரிவித்தார். 'கனவுகள் நிஜமானால்' இப்படத்தை கொமர்சியல் டைரக்ட் இயக்குனர் ரவிக்குமார் தயாரிக்கிறார். படத்தின் கதாநாயகியாக கயிலி சிவகுமாரான், கதாநாயகனாக வாசுதேவன் நடிக்கின்றனர். கதாநாயகியை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள இக்கதையில் கதாநாயகியின் தாயாக அகிலாவும் தங்கையாக சுவேதாவும் நடிக்கின்றனர். காந்தன் முக்கிய பாத்திரத்தில் நடிக்கின்றார்.

'கனவுகள் நிஜமானால்' படத்தில் பொபி ஒளிப்பதிவாளராக உள்ளார். இசை வேந்தன். ஸ்கிரீன் பிளே கஜேந்திரா. இறுதிக் கட்ட படத்தொகுப்பும் விசேட தாக்கங்களும் இந்தியாவில் செய்யப்பட உள்ளது. தமிழ் சமூகத்தில் உள்ள பிரச்சினை ஒன்றை மையப்படுத்தி இத்திரைப்படம் உருவாக்கப்பட்டு உள்ளதாக புதியவன் தெரிவித்தார்.



படப்பிடிப்பின் போது.

# பி பி சி தமிழோசை மீது ஏசியன் ரிபியுன் கண்டனம்

23 ஏப்பிரலில் மட்டு அம்பாறைத் தளபதி கருணாவின் பேட்டியை தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் இருந்து இயங்கும் இணையச் சஞ்சிகையான ஏசியா ரிபியூன் வெளியிட்டது. அதில் கருணா தான் இலங்கையை விட்டு தனது மக்களை கைவிட்டு விட்டு தப்பிச் செல்லவில்லை என்று தெரிவித்து இருந்தார். 23 ஏப்பிரல் பி.பி.சி தமிழோசை ஒலிபரப்பு, கருணா ஆசியன் ரிபியூனுக்கு பேட்டி அளித்தது பொய்யென்று செய்தி வெளியிட்டது. அச்செய்தியை பிபிசி ஆனந்தி வாசித்திருந்தார்.

ஏசியா ரிபியூன் பிபிசி தமிழோசையின் அச்செய்தியை வன்மையாகக் கண்டித்து உள்ளது. பி.பி.சி தமிழோசை ஒலிபரப்புச் செய்த அந்தச் செய்தியின் நம்பகத் தன்மையை ஏசியன் ரிபியூன் கேள்விக்கு உள்ளாக்கி உள்ளது. ஏசியன் ரிபியூன் ஆசிரியர் லண்டன் பி.பி.சி தமிழ்மொழி ஒலிபரப்பின் தமிழோசையோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு 24 ஏப்பிரல் அன்று கடமையிலுள்ள அதன் அதிகாரிக்கு இது சம்பந்தமாகப் புகார் செய்துள்ளார். கிளைத் தலைவர் மணிவண்ணன் வார இறுதி விடுமுறையில் வராததால் அவர் திங்கள் திரும்பி வேலைக்கு வந்தபின்னர் அந்தச் செய்தி பற்றிய பிரச்சனைக்கு ஆவன செய்வார் என்று அங்கு கடமையிலிருந்த அதிகாரி கூறினார். பிபிசி தமிழொசை ஒலி பரப்பிய செய்தியானது கொழும்பு பி.பி.சி செய்தியாளர் பிறான்சிஸ் கரிசனால் தரப்பட்டதென்று ஏசியன் ரிபியுனுக்குச் சொல்லப்பட்டதாக ஏசியன் ரிபியூன் தெரிவிக்கிறது.

ஏசியன் ரிபியூன் இது சம்பந்தமாக விஷேட கவனம் செலுத்தி அந்த செய்தி பற்றி வேண்டிய திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுள்ளது. நாம் வெளியிட்ட செவ்வியின் ஆதாரத்தை பொய்யென்று கூறுவது, ஒலிபரப்புச் சேவையில் வேலை செய்பவர்களின் வெறுக்கத்தக்க நடவடிக்கையாகும் என ஏசியா ரிபியூன் தனது விசனத்தை வெளிப்படுத்தி உள்ளது. அந்தச் செவ்விச் செய்தியின் நேர்மை உண்மை ஆதாரத்தை மறுத்ததால், அந்த நாளாந்தக் கணணி ஊடகத்திற்கு செய்த ஈடு இணையற்ற நட்டத்தை நிவர்த்திக்கும்படி, நாம் நாகரீகமான அத்தனை வழிகளையும் கையாண்டு பிபிசி தமிழோசையை நிர்ப்பந்திப்போம் எனவும் ஏசியா ரிபியூ எச்சரித்து உள்ளது.

குறிப்பு: கருணா தான் இலங்கையில் இருப்பதாக பேட்டி அளித்து 48 மணி நேரத்தில் பிரதான விடுதலைப் புலிகள் அமைப்பினர் மீது மட்டக்களப்பில் இனம் தெரியாதவர்கள் தாக்குதல் நடாத்தி உள்ளனர். இதில் 7 புலி உறுப்பினர்கள் மரணமடைந்தனர்.

# இலங்கைத் தேர்தல் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய அறிக்கை மே யில்

இலங்கையில் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக தமது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கும் பொருட்டு ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் குர்கைன் அடுத்த மாத இறுதியில் இலங்கை செல்கிறார். தேர்தல் அதிகாரிகள், அரசாங்கம், அரசியற் கட்சிகள், ஊடகங்கள் மற்றும் சிவில் அமைப்புகளிடம் அவர் அறிக்கைகளை சமர்ப்பிப்பார்.

தேர்தலுக்குப் பிந்திய நிலைமைகளை மே 2 ஆம் திகதிவரை அவதானிக்கும் பொருட்டு தனது 6 நிபுணர்களை கண்காணிப்புக் குழு இலங்கைக்கு அனுப்பி உள்ளது. அவர்கள் விரிந்த அறிக்கையினை மே மாத இறுதியில் வெளியிடுவார்கள் என ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவின் கொழும்பு நிலையம் தெரிவித்திருக்கிறது.

அரசியற் சூழ்நிலை, ஊடகங்களின் நடத்தை, வாக்கு எண்ணுதலும் ஒழுங்குபடுத்தும் செயன்முறையும், தேர்தல் செயற்திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை அமையும். தேர்தல் மறுசீரமைப்பு மற்றும் ஜனநாயக ரீதியான சூழல் ஆகியவற்றையும் ஐரோப்பிய ஒன்றியம் முன்வைக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# 470 இலங்கையர்கள் சோமாலியாவில் கைவிடப்பட்டு உள்ளனர்

ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி கூட்டிச் செல்லப்பட்ட 470க்கும் அதிகமான இலங்கையர்கள், ஆபிரிக்காவில் கைவிடப்பட்டுள்ளதாக பி.பி.ஸி. செய்தி தெரிவிக்கிறது. ஆபிரிக்க நாடான சோமாலியாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள துறைமுக நகரான மொடிசோவில் இவர்கள் கைவிடப்பட்டு உள்ளனர். கைவிடப்பட்டவர்களில் அநேகமானோர் இத்தாலி, ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி முகவர்களால் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் என அச்செய்தி தெரிவிக்கிறது. இவர்களில் சிலர் சுமார் ஒன்றரை வருடங்களாக அங்கு தங்கி உள்ளார்கள் எனவும் அச்செய்தி கூறுகிறது.

இவர்கள் சுமார் 5 ஆயிரம் அமெரிக்க டொலர் வரை தமது பயண முகவர்களிடம் செலுத்தியுள்ளனர். மொசோகோ நகரிலிருந்து ஜேர்மனிக்கோ இத்தாலிக்கோ அழைத்துச் செல்வதாகக் கூறி மோசமான மீன்பிடி வள்ளங்களில் கும்பலாக ஏற்றிச் செல்லப்பட்டவர்களின் கடற்பயணங்கள் பல சோகத்தில் முடிந்திருக்கின்றது எனவும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

QUALITY RIGID KITCHENS
Suppy Only or Suppy & Fit
* Replacement Doors available any size
* Made to measure Bedrooms
* All makes of Appliances
* Trade account welcome



HEATHROW KITCHENS
140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
020 8813 6952

## இலண்டன் மே தின நிகழ்வு

இலண்டன் மே தினத்தை தோழர் சண்முகதாசனின் நிகழ்வாக நடாத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இந்நிகழ்வில் கார்ள் மார்க்சின் வாழ்வும் போதனைகளும், சண்முகதானசின் கட்டுரைகள் என்ற இரு நூல்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. தோழர் வேலு அவர்களின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் மு நித்தியானந்தன், வி சிவலிங்கம், யமுனா ராஜேந்திரன், தம்பிராஜா, ந சபேசன், நாவலன் ஆகியோர் உரையாற்ற உள்ளனர். மார்க்சியக் கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம் ஏற்பாடு செய்துள்ள இவ்விழா மாலை 4:30 முதல் 8:00 மணி வரை நடைபெற உள்ளது. 114, Hanworth Rd, Hounslow, Middlesex, TW3 உள்ள கவுன்சுலோ யுனைடட், றிபோம்ட் சேர்ச் மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறும். மேலும் மே தினத்தன்று கார்ல் மார்க்சின் கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்தவும் இவ்வமைப்பினர் திட்டமிட்டு உள்ளனர். (மேலதிக விபரங்களுக்கு : த ஜெயபாலன் 020 8279 0354, பாலன் 077 5346 5573)

LIFESTYLE MORTGAGES
The Mortgage Code Compliance Board
Registered with the Mortgage Board
INDEPENDENT MORTGAGE SPECIALISTS
enquiries@lifestylemortgages.uk.com
MORTGAGE PROBLEMS ??? NO PROBLEM !!!
Call Lifestyle today for a quick answer to your problems
Also available:- 125% Mortgages, First-time Buyers, Council RTB, Income multiples 4 x Single or 3.25 x Joint Self-Employed - No Proof of Income required & No Accounts (90% maximum advance). Adverse credit, Defaults, CCJs, Bankruptcy, etc. (All loans subject to your own financial circumstances)
NO MORTGAGE = NO FEE
8am to 10pm Monday to Saturday (We only chager on results)
Call now: 020 8574 2008
For friendly assistance and a written quotation
A Fee of 1% of any loan arranged is usually charged by Lifestyle Mortgages
Yor home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secured on it.
6A South Road, Southall, Middx. UB1 1RT

# TCHAல் மீண்டும் குழப்பம்?
# ஜெயதேவன் வேலை நீக்கம்



என் ராம்ராஜ்



ஆர் ஜெயதேவன்

Tamil Community Housing Association இன் தலைவர் என் ராம்ராஜ் அவரது நண்பரும் அவ்வமைப்பின் இயக்குநருமான ஆர் ஜெயதேவனை தற்காலிகமாக வேலையில் இருந்து நிறுத்தி உள்ளார். கடந்த சில ஆண்டுகளாக தமிழ் சமூக வீட்டு அமைப்பின் சீரற்ற, திறனற்ற நிர்வாகம் பற்றியும் அங்கு ஊழல்கள் நடைபெறுவதாகவும் பலத்த குற்றச்சாட்டுக்கள் இருந்து வந்தது. இவ்வமைப்பின் இயக்குநர் பதவிக்கு விண்ணப்பித்த தினகரநாதன் என்பவரின் வழக்கில் TCHAன் நிர்வாக முறைகேடுகள் வெளிவந்தது. இவ்வமைப்பினால் வேலை நீக்கம் செய்யப்பட்ட பாலா அதற்கு எதிராக வழக்குத் தொடுத்து தன்பக்கத்து நியாயத்தை நிலைநிறுத்தினார். அதில் ஆர் ஜெயதேவனின் முகாமைத்துவம் நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளானது. இதற்கு முன்னர் குமார் என்பவர் வேலைநீக்கம் செய்யப்பட்டு அவருக்கு நீதிமன்றத்துக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் நட்டஈடு வழங்கப்பட்டது.

ஜெயதேவன் முகாமைத்து அமைப்பின் கட்டளைக்கு அமைய செயற்படாததாலேயே தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டதாக தெரியவந்து உள்ளது. இவ்வேலை நிறுத்தம் தொடர்பாக TCHAன் தலைவர் என் ராம்ராஜ் இடம் கேட்ட போது ஜெயதேவன் என்ற TCHAன் அலுவலர் தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டதை உறுதிப்படுத்தினார். ஆனால் இதில் தான் மேலதிகமாக எதனையும் சொல்ல முடியாது என்று மறுத்துவிட்டார். இது தொடர்பாக ஆர் ஜெயதேவனிடம் தொடர்பு கொண்ட போது முகாமைத்துவ அமைப்பு (Board) தன்னை வேலை நிறுத்தவில்லை என்றும் தன்னைப் பொறுத்தவரை தான் இப்போதும் TCHAஇன் அலுவலர் என்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் சில சட்டவிடயங்களால் தன்னால் TCHAக்கு செல்ல முடியாது உள்ளதை ஒத்துக்கொண்டார்.

ஈஸ்றர் விடுமுறைக் காலப் பகுதியில் TCHA தலைவர் ராம்ராஜ் அவரை தற்காலிகமாக வேலைநீக்கம் செய்வதாக இயக்குநர் ஆர் ஜெயதேவனுக்கு அறிவித்து உள்ளார். அதன் பின்னர் வங்கி விடுமுறை தினமான ஏப்பிரல் 12 அன்று TCHA அலுவலர் ஒருவரையும் அழைத்துக் கொண்டு TCHA அலுவலகத்துக்குச் சென்ற ராம்ராஜ் அவ்வலுவலகத்தின் பூட்டுகளை மாற்றி ஜெயதேவன் அவ்வலுவலகத்துக்குள் நுழைய முடியாதபடி செய்துள்ளார். ஜெயதேவன் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டதை TCHA அலுவலர்கள் அறிந்து இருக்கவில்லை. ஜெயதேவன் கட்டாய உடல்நல விடுமுறையில் இருப்பதாகவே தங்களுக்குத் தெரியும் என TCHAன் அலுவலர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். பின்னர் TCHAக்கு நிதி வழங்கும் Housing Co-Operation தனது வழமையான கூட்டத்திற்கு வந்துபோது ஜெயதேவன் தற்காலிகமாக வேலை நிறுத்தப்பட்டதை அவர்கள் அலுவலர்களுக்குத் தெரியப்படுத்தியதாக அங்கிருந்த அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

ராம்ராஜ் - ஜெயதேவன் கூட்டு TCHAன் நிர்வாகத்தில் மிகவும் சர்ச்சைக்குரியதாகவே இருந்துவந்தது. TCHA அறக்கட்டளை அமைப்பின் கூட்டங்கள் பொலிஸ் பாதுகாப்புடன் நடத்தப்பட வேண்டிய அளவுக்கு சென்றிருந்தது. ராம்ராஜ் - ஜெயதேவன் இருவருமே தற்போதைய சம்பவம் வரை இணை பிரியாமல் செயற்பட்டு உள்ளனர். ராம்ராஜ் தனது செல்வாக்குடன் தான் ஜெயதேவனை இயக்குநராக நியமித்து முகாமைத்துவ அமைப்பின் செயலாளராகவும் ஆக்கினார் என்ற குற்றச்சாட்டும் இருந்து வருகிறது. இவர்களுக்கு இடையே அண்மைக்காலமாக அதிகாரப் போட்டி நிலவியதாகவும் அதுவே ராம்ராஜ் - ஜெயதேவன் முறிவுக்கு காரணம் எனவும் தெரியவருகிறது. இதில் ஒரு பெண்ணும் சம்பந்தப்பட்டு உள்ளார் என TCHA அலுவலகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளொன்றிற்கு
£25 வீதம் மாதம்
6 நாட்கள் வரை
நிரந்தரமாக வேலை
வேண்டுமா?
020 8952 5677

EDITOR: Dr T RAVIKUMAR Chief Reporter: T.JEYABALAN Advertising Manager: T. PUSHPALINGHAM FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

# உள்நாட்டு யுத்தத்தால் பெண்கள் பாதிப்பு

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகச் சமூகப் பிரச்சினைகள் பல பூதாகரமாக உருவெடுத்துள்ளது. இதில் போர்க்கால விதவைகள் தொடர்பான பிரச்சினைகள் முக்கியமானது. இவ்வாறு சமாதானம் மற்றும் சுதந்திரத்திற்கான சர்வதேச மகளிர் லீக்கின் பிரதித் தலைவி டுல்சி.டி.சில்வா கூறியுள்ளார். தேசிய யுத்த எதிர்ப்பு முன்னணியினரால் அம்பாந்தோட்டையில் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கம் ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், போரினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் காரணமாக நாடு முழுவதிலும் சுமார் நான்கு லட்சம் பெண்கள் விதவைகளாகியுள்ளதாகத் தெரிவித்தார். இவ்வாறு விதவைகளாக இருப்பவர்களில் கணிசமான தொகையினர் 20-30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்

# ஐ நா - தாயகத் தமிழர்கள் பற்றிய கணிப்பு

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) வடக்கு கிழக்கு போரினால் பாதிக்கப்பட்ட மக்களிடையே செய்த ஆய்வுகளின் படி உள்ளூரில் இடம்பெயர்ந்து வாழும் சுமார் 35,000 பேரில் 10,000 பேர் சிறுவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. மேலும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் மட்டும் சுமார் 41,000 பேர் போர் காரணமாக விதவைகளாகி உள்ளனர். அத்துடன் வடக்கு கிழக்கிலுள்ள 41 பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களில் சுமார் 2500 சிறுவர்கள் அநாதைகளாக வாழ்ந்து வருவதும் கண்டறியப்பட்டுள்ளது.

# இலண்டனில் புஸ்பராஜாவின் சாட்சியம்

புஸ்பராஜாவின் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற நூலின் அறிமுக விழா ஈஸ்ற்காம் ரிறினிற்றி மண்டபத்தில் ஏப்ரல் 10ல் இடம்பெற்றது. தமிழரசுக் கட்சியின் தலைவர் ஆவரங்கால் சின்னத்துரையின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் அரசியல் ஆய்வாளர் வி சிவலிங்கம், தமிழ் ரைம்ஸ் ஆசிரியர் இராஜநாயகம், தீபம் முன்னிலையாளர் எம் என் எம் அனஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி இலண்டன் கிளைத் தலைவர் நிக்களஸ் பிள்ளை, மங்கையற்கரசி அமிர்தலிங்கம், ந சபேசன் ஆகியோர் உரையாற்றினர்.

புஸ்பராஜாவின் நூல் தமிழர்களின் போராட்டத்தின் ஒரு காலப்பகுதியையாவது உண்மையில் சொல்லி இருக்கும் என அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர். இந்நூல் பெப்ரவரி 15ல் பரிசில் வெளியிடப்பட்டு இரு மாதங்களின் பின்னரே இலண்டனில் வெளியிடப்பட்டது. இருந்தாலும் அறிமுகம் செய்தவர்கள் யாரும் நூலை வாசித்திருக்கவில்லை. அவர்களுக்கு வாசிப்பதற்கு நூல் கொடுக்கப்படவில்லை. அதனால் பேச்சுக்கள் அதிஸ்டவசமாக நூல்பற்றியதாக அமையவில்லை. புஸ்பராஜாவின் நூல் தமிழர்களின் போராட்டத்தின் ஒரு காலப் பகுதியையாவது உண்மையில் சொல்லி இருக்கும் என அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

ஆனால் பிரான்சில் உள்ள விமர்சகர்கள் இந்நூலைப் படித்து உள்ளனர். ஈழப் போராட்டத்தில் புஸ்பராஜாவின் சாட்சியம் மிகவும் அபத்தமானது என அவர்கள் தெரிவிக்கின்றனர். புஸ்பராஜா நூலில் குறிப்பிட்ட சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட பலர் இன்னமும் மேற்கு நாடுகளில் வாழ்ந்து கொண்டு உள்ளனர். புலோலி வங்கிக் கொள்ளை, சந்ததியார் பற்றிய விடயங்கள், இளைஞர் பேரவை பற்றிய தகவல்கள் உண்மைக்குப் புறம்பாக திரிபுபடுத்தி எழுதப்பட்டு உள்ளது. இச்சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவருடன் தொடர்பு கொண்ட போது 'புஸ்பராஜாவால் சொல்லப்பட்ட பொய்களும் சொல்லப்படாத உண்மைகளும்' என்று தனியாக ஒரு நூல் எழுதப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

தனிப்பட்ட முறையில் தன்னை மையப்படுத்தி எழுதியுள்ள புஸ்பராஜா சம்பவங்களைத் திரிபுபடுத்தி தன்னை முதன்மைப்படுத்த முயற்சித்து உள்ளார் என்றும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. தனது சாட்சியம் உண்மையானது என வாதிட்ட புஸ்பராஜா ஒவ்வொரு அமைப்பினரும் மற்றையவர்களைப் பற்றி எழுதியது சரியாக எழுதப்பட்டு உள்ளது ஆனால் தங்களைப் பற்றி எழுதியது தான் பிழை எனத் தெரிவிக்கின்றனர். ஆகையால் நான் எழுதிய சாட்சியம் உண்மையானது என்றார் புஸ்பராஜா. புத்தகத்தின் விலை £30 எனக் குறிப்பிட்டது பலரையும் மலைக்க வைத்தது. வியாபாரத்திற்காக வாய்க்கு வந்தபடி வரலாற்றை எழுதி உள்ளார் புஸ்பராஜா என்பது அவர் மீது வைக்கப்பட்ட பெரும் குற்றச்சாட்டாக உள்ளது.

# ஓவியமும் யாழ் அரும்பொருட்களும் இலண்டனில் விழிப்புணர்வுச் சந்திப்பு

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் சதானந்தத்தின் ஓவியங்கள் பற்றிய சந்திப்பும் கலந்துரையாடலும் ஏப்ரல் 11ல் எட்மன்டனில் இடம்பெற்றது. இலண்டனுக்கு ஓவியங்களை எடுத்து வர முடியாததால் சதானந்தனின் ஓவியங்களின் சிலைட்ஸ் திரையில் காட்டப்பட்டு அதற்கான விளக்கங்களும் கொடுக்கப்பட்டது. ஓவிய ஆர்வலர்கள் பலரும் கேட்ட கேள்விகளுக்கு சதானந்தன் பதிலளித்தார்.

யுத்தம், அது சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள், தனி மனித உணர்வுகள், சமூக உணர்வுகள் என்பனவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் ஓவியங்கள் அமைந்திருந்தன. அதனை அடுத்து இடம்பெற்ற கலந்துரையாடலில் மக்களிடையே ஓவியம் பற்றிய புரிதல் இல்லாததும் இன்றும் மருத்துவம், பொறியியல், கணக்கியல் துறைகளையே தமிழ் சமூகம் பற்றிக் கொண்டு உள்ளது என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. யுத்தம் பற்றி தென்னிலங்கை ஓவியங்கள் பேசிய அளவுக்கு தமிழர்களின் படைப்புகள் பேசவில்லை என்பதை சதானந்தன் தனது பேச்சில் வேதனையுடன் வெளிப்படுத்தினார். தென்னிலங்கையில் ஓவியங்களுக்கான ஒரு தளம் அமைக்கப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் கோயில் திரைச் சீலைக்கு ஓவியம் கீறப்படுவதற்கு அப்பால் தமிழ் மக்களுக்கு ஓவியம் பற்றிய அறிவு இல்லை என்பதையும் அவர் வேதனையுடன் சுட்டிக்காட்டினார்.

அதனை அடுத்து யாழ் மாவட்டத்தில் உள்ள அரும் பொருட்கள் கொழும்புக்கு கடத்தப்படுவது பற்றி பேசப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நவீனம் என்ற பெயரில் அரும்பொருட்களின் இடத்தை பிளாஸ்டிக்குகள் பிடித்து வரும் ஆபத்து சுட்டிக்காட்டப்பட்டது. தமிழ் சமூகத்தின் வரலாற்றைத் தாங்கி நிற்கும் அரும் பொருட்கள் அதன் விலைமதிப்பற்ற தன்மை உணரப்படாமல் அழிக்கப்படுவதும் தென்னிலங்கை வர்த்தகர்களுக்கு சில ஆயிரம் ரூபாய்களுக்கு விற்கப்படுவதும் மிக வேகமாக இடம்பெறுவது சுட்டிக்காட்டப்பட்டது. புலிகள் இதன் விற்பனைக்கான தடையை விதித்த போதும் அது வெறும் பெயரளவிலானதாகவே உள்ளதாக சதானந்தன் குறிப்பிட்டார்.

ஆலயங்கள் கூட இந்த அரும்பொருட்களை விற்றுவிட்டு நவீனத்துக்கு மாறுவதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. வெளிநாடுகளில் இருந்து பணம் வருவதை அடுத்து வரலாற்றுத் தொன்மை, முக்கியத்துவம் இவற்றைக் கருதாமல் புனர்நிர்மாணம் திருத்த வேலைகள் என்ற பெயரில் வரலாற்றுச் சான்றுகள் அழிக்கப்படுவது சுட்டிக்காட்டப்பட்டது. குறிப்பாக இங்குள்ள ஆலயங்கள் தாயகத்தில் உள்ள ஆலயங்களின் தொன்மை, வரலாறு முக்கியத்துவங்களை பாதுகாக்க முன்வரவேண்டும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக கலைப் பிரிவு மேற்கொண்டுள்ள விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் அரும்பொருட்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை சந்தானம் அங்கு விபரித்தார். அவரது முயற்சியையும் அவரது ஓவியத் திறனையும் ஆர்வலர்கள் பாராட்டினர்.

# 250 ஆண்டு பழமையான ஆலய மணி திருட்டு

யாழ்ப்பாணம், கொக்குவில் கோயிலாக்கண்டி மத்தி ஸ்ரீ சிதம்பரசுப்பிரமணிய ஆலயத்தின் 250 ஆண்டுகள் பழமைவாய்ந்த காண்டா மணி ஏப்பிரல் 15 இரவு திருடப்பட்டது. எனினும், திருடன் எடுத்துச் செல்லப்படுகையில் மறுநாள் அது மீட்கப்பட்டது. சைக்கிளுடன் மணியைக் கை விட்டுவிட்டுத் திருடன் தப்பியோடி விட்டான் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆலய மணி திருடப்பட்டது தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்வதற்காக கொக்குவிலிலிருந்து கோவில் உரிமையாளர் நேற்று அழைத்துவரப்பட்ட போது, நாவற்குளி மயானத்திற்கு அருகில் உள்ள வீதியில் ஒருவர் மணியை சைக்கிளில் ஏற்றி வருவதை அவர்கள் கண்டுள்ளனர். உடனடியாக விசாரித்த போது திருடன் மணியையும் சைக்கிளையும் கைவிட்டு ஓடித்தப்பியுள்ளான் என்று கூறப்பட்டது.

தென் இந்தியாவின் திருச்செந்தூரில் இருந்து 1742ஆம் ஆண்டு இந்தக் காண்டாமணி கொண்டுவரப்பட்டு ஆலயக் கோபுரத்தில் பிரதிட்டை செய்யப்பட்டது. 250 வருடங்களுக்கு மேலாக மணிக்கோபுரத்தில் இருந்துள்ளது. இந்தக் காண்டாமணி சுமார் 55 கிலோ நிறையுடையது எனத் தெரிவிக்கப்பட்டது.

1999ல் இடம்பெயர்ந்த இப்பிரிவு மக்கள் 2002ல் மீளக்குடியமர வந்தபோது இந்த ஆலயத்தில் அனைத்துப் பொருட்களும் திருட்டுப் போகாமல் இருந்துள்ளன. ஆலயம் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு கடந்த வருடம் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. கடந்த மாதம் 10 தினங்கள் அலங்கார உற்சவமும் நடைபெற்றுள்ளது.

மீட்கப்பட்ட மணி, திருடனின் சைக்கிள் ஆகியவை சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொலீஸாரால் மணி மீளக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தாயகப்பகுதிகளில் வரலாற்றைத் தாங்கி நிற்கும் அரும்பொருட்களும் ஏனைய வரலாற்று வளங்களும் களவாடப்படுவது பற்றியும் அது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் இவ்வாறான திருட்டுக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

SIGN STOP
020 8514 6622
Quality Shop Signs
Right on Time !!
Window + Van Graphics
தரமான சைன்ஸ் குறிப்பிட்ட நேரத்திற்கு பெற்றிட நாடுங்கள்
568, Romford Road, Manor Park, E12

thelondon@udhayan.freeserve.co.uk

Dogra Estate Agents
Specialists in Residential Sales, Letting for Professional Tenants
Call Mr.Arvind Dogra on
Tel: 020 8574 3737
Fax: 020 8574 3737
Mobile: 07899 797979
Emai: property2000dea@aol.com
120 The Green, Southall, Middlesex, UB2 4BQ

We DISCOUNT our PRICES not our QUALITY
DISCOUNT (CONSTRUCTION) DOUBLE GLAZING
FENSA Registered Company
Over 20 Years Experience
Selling direct to Public
VISIT OUR SHOWROOM and see our VAST RANGE of
QUALITY CONSERVATORIES
Visit our website: www.dconsdgltd.co.uk
Email: bhudia@freeuk.com
Call 020 8514 0819
844 Romford Rd, Manor Park, London E12 5JP

Motor Masters
Top Quality Servicing & Repair on all Makes of Vehicles
M.O.T. While you wait
Unit 7, The Squirrel Trading Estate, Viveash Close, Nestles Avenue, Hayes, Middlesex UB3 4RZ.
Tel: 020 8561 9100
Fax: 020 8573 8641

MAHARAJA
Indian Meat & Poultry
WHOLESALERS & RETAILERS OF FRESH MEAT & POULTRY
SUPPLIERS TO THE TRADE & RESTAURANT
WE ALSO SELL
BOILER CHICKEN GROUSE, QUAILS, (BHATERA), DEER, PIGEON, RABBIT, SPRING LAMB, AND WHOLE MUTTON AT LOW PRICES
We Sell & Rent Films on Video & DVD
Tel: 020 8813 7700
776 Uxbridge Road, Hayes, middx. UB4 0RS

V.J.CARPETS Ltd.
Full 3 Bedroom house Carpets
100 Sq. Yds. SPECIAL OFFER
only £500 Fitted
CALL
(T) 020 8574 9033
(M) 07958 681 009
110, The Green, Southall, Middx. UB2 4BQ

Taste of Asia
Halal Restaurant and Takeaway
OPEN NEW
* Srilankan Special
* Sunday Buffet only 4.99
* Party Orders
020 8424 2151
3, Masons Avenue, Harrow Wealdstone

ARIANA ELECTRONICS
Sales - Service - Repairs
For TV, Video, HiFi, CD/DVD, Car Stereos, Washing Machines, Fridge-Freezers, Microwave & many more
Call on
Tel: 020 8569 0414
964, Uxbridge Road, Hayes, Middx. UB4 0RL

MALIK DOUBLE GLAZING LTD
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches
Trade & Retail Welcome
020 8459 8811
www.malikdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP

SAMRANA
* BLANK MEDIA CD-R, DVD-R, BLANK VHS,
* CD JEWEL CASES / DVD CASES,
* PRINTING PAPERS, INK CARTRIDGES,
* PLASTIC SLEEVES AND WALLETS
T: 020 8520 9485/ 020 8521 4646
F: 02089237658
INFO@SAMRANA.CO.UK
website: www.samrana.co.uk
74 HOE STREET W'STOW, LONDON E17 4PG

# இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை - குரொய்டன் இளைஞர்கள்

இளைஞர்களுக்கு வாய்ப்பும் சந்தர்ப்பமும் அளிக்கப்படுவதில்லை என குரொய்டன் இளைஞர்கள் முறையிட்டனர். மார்ச் இறுதிப்பகுதியில் குரொய்டன் தமிழ் சங்கத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருந்தனர். இச்சந்திப்பில் குரொய்டன் தமிழ் சங்கப் பிரதிநிதிகள் ஐவர், கவுன்சிலர் போல் சத்தியநேசன், உதயன் நிருபர் ஆகியோருடன் அப்பகுதி இளைஞர்கள் 20 பேர்வரை கலந்து கொண்டனர். குரொய்டன் இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்சந்திப்பில் இளைஞர்களை சமூகத்தில் இருந்து விலத்துவதைத் தவிர்த்து அவர்களை சமூகத்தின் முக்கிய அங்கமாக்குவதற்கு எவ்வாறான செயற்பாடுகள் அவசியம் என்பது பற்றி ஆராயப்பட்டது.

இளைஞர்கள் வன்முறையாளர்கள் அல்ல என்றும் அவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் புறக்கணிக்கப்படுவதாலேயே தவறான வழிக்குச் செல்வதாகவும் அவ்விளைஞர்கள் தெரிவித்தனர். தாம் இந்த வன்முறை நடவடிக்கைகளில் விருப்பத்துடனோ வலிந்தோ இறங்குவதில்லை என்றும் அதற்குள் இழுக்கப்படுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். சமூகத்தில் உயர்ந்த நிலையில் தம்மைக் காட்டிக் கொள்பவர்கள் தங்களைப் பயன்படுத்துவதையும் அவர்கள் சுட்டிக் காட்டினர். ஊடகங்கள் இளைஞர்களைப் பற்றி மிகைப்படுத்தப்பட்ட சிலசமயம் தவறான செய்திகளையும் வெளியிடுவதாகவும் அது நிலைமைகளை மேலும் மோசமாக்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த இளைஞர்களை இணைத்து செயற்படுகின்ற வகையில் குரொய்டன் தமிழ் சங்கத்தை போல் சத்தியநேசன் மிகவும் பாராட்டியதுடன் இவர்கள் முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இளைஞர்கள் தாங்கள் சமூகத்துடன் கலக்க முயற்சிக்க வேண்டும் எனவும் கவுன்சிலர் இளைஞர்களைக் கேட்டுக் கொண்டார். இரவு உணவின் பின் சந்திப்பு இனிதே நிறைவுற்றது.

# தமிழ் ஓலைகள்

11வது வருடமாக தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வரும் தமிழ் ஓலைகள் இதழ் தமிழ் புது வருட தினத்தன்று வெளியிடப்பட்டுள்ளது. 11 வருடங்களுக்கு முன் இலண்டனை மட்டுமே மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட தமிழ் ஓலைகள் தற்போது ஐரோப்பா வரை தனது சிறகுகளை விரித்துள்ளது. T சிறிஸ்கந்தராஜா, A ஞானேந்திரன் இன் முகாமைத்துவத்தின் கீழ் வெளியாகும் இத்தமிழ் ஓலைகள் பிரசுரம் இன்று லண்டனில் மட்டுமல்ல ஐரோப்பியாவின் முக்கிய விளம்பரக் கொத்தாக வெளிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இலண்டனில் கூடிய பிரதிகள் அச்சிடப்படுவதும் குறிப்பிடத்தக்க அம்சம்.

# பொங்கும் பொழுது 2004

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொங்கும் பொழுது 2004 நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 29ம் திகதி பிரம்மாண்டமான இல்பேர்ட் ரவுன்கோலில் இடம்பெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் திருமதி மாதினி சிறிஸ்கந்தராஜாவின் கர்நாடக இசைக்கச்சேரியும் ராகாஸ் குழுவினரின் இசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது. திருமதி மாதினி சிறிஸ்கந்தராஜா மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவியும் கல்லூரியின் மூத்த ஆசிரியரும் பிரபல தமிழ் அறிஞரான காலம் சென்ற வித்துவான் வேலனின் மகள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# யூலை வரை மப்பும் மந்தாரமும்

யூலை வரையான காலநிலை மப்பும் மந்தாரமுமாகவே இருக்கும் என காலநிலை கணிப்புகள் எதிர்வு கூறி உள்ளன. கடந்த ஆண்டு வழமைக்கு மாறாக வெப்பநிலை மிகுந்த உச்ச நிலைக்கு (38.5 சென்ரிகிரேட்) சென்றிருந்தது. இவ்வாண்டு பொதுவாக மழை பெய்யும் எனவும் காலநிலை மிகவும் மகிழ்ச்சியாக இருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் நுகர்வோர் கொள்வனவு கடந்த ஆண்டு போல் அமையுமா என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டு உள்ளது. இது பிரித்தானிய பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

SIGN ★ A ★ RAMA
"WHERE THE WORLD GOES FOR SIGNS"
For all your Signage needs
Shop Fascias, Window Graphics, Pavement Boards and much more
0800 634 0096
220 Church Lane, Kingsbury
London NW9 8SN
www.signking.net
QMS ISO 9001 REGISTERED FIRM
Reg. No. 8876

FUNTASIA
The Party Shop



BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான அலங்கார சோடனைகளுக்கு நாடுங்கள் Funtasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM
BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT D 011 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ




# வீட்டுக் கழிவுகள் - கட்டாய சுத்திகரிப்பு

வீட்டுக் கழிவுகளை கட்டாயம் சுத்திகரிக்கும் திட்டம் பார்னற்றில் உள்ள 4 உள்ளாட்சி தொகுதிகளில் ஏப்ரல் 1 முதல் அமுலுக்கு வந்துள்ளது. இப்பரீட்சார்த்தத் திட்டத்தில் 25,000 இல்லங்கள் பங்கு கொண்டுள்ளன. பிரித்தானியாவிலேயே பார்னற் உள்ளாட்சி மன்றப் பிரிவிலேயே அதிக அளவு வீட்டுக் கழிவு சுத்திகரிக்கப்படுகிறது. இவ்வீட்டுக் கழிவுகளை சுத்திகரிக்க மறுப்பவர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை உள்ளாட்சி மன்றம் அனுப்பி வைக்கும். இதன் மூலம் வீட்டில் வதிபவர்கள் கழிவுகளை சுத்திகரிக்கத் தூண்டப்படுவார்கள். இவற்றுக்குப் பலனில்லாமல் போகும் போது சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். இது £1,000 அபராதத்தில் முடிவடையும்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், போத்தல்கள், சப்பாத்துகள், பொய்ல் போன்றவை பொதுவான வீட்டுக் கழிவுடன் சேர்க்கப்படாமல் அதற்கென வழங்கப்பட்ட கறுப்புப் பெட்டியில் போடப்பட வேண்டும்.

கழிவு சுத்திகரிக்கப்படுவதில் ஐரோப்பாவில் பிரித்தானியாவே மிகவும் பின்தங்கி உள்ளது. இங்கு 12 வீதமான கழிவுகளே சுத்திகரிக்கப்படுகிறது. இதனை அடுத்த ஆண்டில் 25 வீதமாக்க வேண்டும் என அரசு நிர்ணயித்து உள்ளது. இதனை 2010ல் 30 வீதமாக அதிகரிக்கவும் அரசு திட்டமிட்டு உள்ளது.

# போலித் திருமணங்களும் மாணவர்களும

பிரித்தானியாவுக்குள் நுழைவதற்கு போலித் திருமணங்களை மேற்கொள்வதும் மாணவர்களாக பாவனை செய்து வருவதும் அதிகரித்து உள்ளதாக அண்மையில் பொதுப் பணித்துறையில் உள்ளவர்களால் கசியவிடப்பட்ட கடிதங்கள் சுட்டிக்காட்டுகின்றன. பிரித்தானியாவுக்குள் நுழைவதற்காக 15,000 போலித் திருமணங்கள் நடைபெறுவதாக கசியவிடப்பட்ட இலத்திரனியல் மடலில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அரசாங்கம் இவ்வாறாக 1,700 திருமணங்களே நடைபெறுவதாகக் குறிப்பிட்ட போதும் வெளியான தகவல் மிக அதிகமாக காணப்படுகிறது.

மேலும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து பலர் போலி ஆவணங்களைக் காட்டி நுழைவது சுட்டிக்காட்டப்பட்ட போதும் குடிவரவு அமைச்சர் பெவர்லி கியூச் அதற்கு நடவடிக்கை எடுக்காமல் அசமந்தமாக இருந்தார். இவ்விடயம் ஊடகங்களில் வெளியானதை அடுத்து அமைச்சர் பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டு பதவி இழந்தார்.

# ஈராக் அமெரிக்காவின் வியட்நாம்

ஈராக் அமெரிக்காவின் இன்னுமொரு வியட்நாம் என அமெரிக்க அரசியல் வாதி ஒருவரால் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. மார்ச் முதல் தாக்குதல்கள் மிகவும் தீவிரமடைந்து உள்ள நிலையில் இக்கருத்து வெளியிடப்பட்டு உள்ளது. இதற்கிடையே பிரித்தானியாவும் அமெரிக்காவும் தாம் இப்போதைக்கு ஈராக்கை விட்டு பயந்து வெளியேறிவிட மாட்டோம் எனத் தெரிவித்து உள்ளனர். ஜனவரியில் பிரித்தானியப் படைகள் பற்றி கருத்துக் கூறிய வெளிநாட்டு அமைச்சர் ஜக் ஸ்ரோ படைகள் 2007 அளவில் வெளியேறலாம் என்ற வகையில் கருத்து வெளியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மிரட்டலுக்கு எதிராகக் கண்டனம்

சிறிய இடைவெளிக்குப் பின் இலண்டனில் ஆரம்பிக்கப்பட்ட (TBC) தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலுக்கு எதிராக கண்டனங்கள் வெரிவிக்கப்பட்டு உள்ளது. TBC வானொலிக்கு பலத்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகிறது. மாற்றுக் கருத்துக்களுக்கு ஒரு தளமாகச் செயற்பட்டு வரும் இவ்வானொலியின் நேரடி ஒலிபரப்புகளில் கலந்து கொள்ளும் சில விசமிகள் பல நூற்றுக்கணக்கானோர் கேட்டுக் கொண்டிருக்கும் வானலையில் தகாத வார்த்தைகளைப் பேசி கொலை மிரட்டல்களை விடுவதாக அதன் பணிப்பாளர் ராம்ராஜ் உதயனுக்குத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் தங்கள் வீட்டுக்கும் தொலைபேசியில் மிரட்டல்கள் வருவதாகவும் தனது மனைவியை வெள்ளைச் சீலை வாங்கி வைக்குமாறு மிரட்டுவதாகவும் அவர் கூறினார். இம்மிரட்டல்கள் பற்றி ஸ்கொட்லன்ட்யாட்டுக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது. இதனை அவர்கள் உறுதிப்படுத்தினர்.

TBC வானொலிக்கு விடுக்கப்பட்ட மிரட்டல்கள் போல் பொதுவான ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் மிரட்டல்கள் விடுக்கப்பட்ட உள்ளது. தமிழ் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களதும் பாதுகாப்பு பற்றி ஸ்கொட்லண்யாட்டுக்கு தெரியப்படுத்தப்பட்டும் உள்ளது. இலங்கை ஜனநாயகத்துக்கான அமைப்பு, அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமைகளுக்கான இயக்கம் போன்ற மனித உரிமை அமைப்புகள் ஊடகங்களை மிரட்டும் செயல்களுக்கு தங்கள் கண்டணத்தை தெரிவித்து உள்ளதுடன் அதனை சர்வதேச அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளன.

அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமைகளுக்கான இயக்கம் அண்மைக்காலமாக (TBC) தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு விடுக்கப்பட்டு வரும் அச்சுறுத்தல்கள் தமக்கு மிகவும் வேதனையளிக்கிறது எனத் தெரிவித்து உள்ளது. கருத்துக்களை கருத்துகளுடன் எதிர்கொள்ளாமல் கருவிகளுடன் எதிர்கொள்ள நினைப்பது பாசிசத்திற்கே வழி வகுக்கும் என அவ்வமைப்பு தெரிவித்து உள்ளது. மேலும் மாற்றுக் கருத்துக்களுக்கான ஒரு ஜனநாயகச் சூழல் உருவாக மக்கள் நலனில் அக்கறையுள்ள அனைவரும் முன்வரவேண்டும் எனவும் அவ்வமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

# பிரித்தானியாவுக்கு ஆட்கடத்தல்கள்

பொய்யான நிகழ்வுகளுக்கு விசா பெற்று பிரித்தானியாவுக்கு ஆட்கடத்தல்கள் மேற்கொள்ளப்படுவது வெளிப்பட்டு உள்ளது. சோனியா என்ரரைன்மன்ஸ் லிமிட்டட் என்ற நிறுவனம் கலைஞர்களை அழைத்து வருவது என்ற பெயரில் ஆட்கடத்தல்களை மேற்கொண்டதாகவும் அதற்கு ஆளுக்கு £10,000 அறவிட்டதாகவும் விசாரணைகள் நடைபெறுகிறது. இதைவிடவும் ஏசியன் மேளா போன்ற வைபவங்களுக்கு கூட்டாக கலைஞர்களை அழைத்து வரும்போது இவ்வாட்கடத்தல்கள் இடம் பெறுவதாக குற்றம்சாட்டப்பட்டது தெரிந்ததே.

கடந்த டிசம்பரில் இலண்டனில் ஒழுங்கு செய்யப்பட்ட சமாதானப் பேரணியில் அங்கிருந்து வந்து கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் சமாதானத்தின் பெயரால் ஆட்கடத்தல் மேற்கொள்ளப்பட்டது என்ற குற்றச்சாட்டு இலங்கைப் பத்திரிகைகளில் வெளிவந்தமை தெரிந்ததே.

இதே குற்றச்சாட்டுத் தொடர்பாக பொலிவூட் நட்சத்திரங்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# ஆலயத்தின் மணி ஓசையும், பதவிகளின் money ஆசையும் அடியார்கள் திண்டாட்டம், ஆலயத்தில் கொண்டாட்டம்

## ஈலிங் அம்மன் ஆலய நிர்வாகத்தைக் கைப்பற்ற கடுமையான போட்டி

ஆலயம் 1

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் பரிபாலனசபைக்கான தேர்தலில் கடுமையான போட்டி நிலவுகிறது. நிர்வாகத்தைக் கைப்பற்றுபவர்கள் அண்ணளவாக £500,000 மொத்த வருமானத்தை நிர்வகிக்க வேண்டிய பொறுப்புடையவர்கள். அதனால் விரிந்த சிந்தனையும், நேர்மையும் உடைய ஒருவர் தனது நேரத்தை பிரதிபலன் பாராமல் செலவிடக் கூடிய ஒருவர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவ்வாலயங்களுக்கு உள்ளே உள்ள பூசல்களைப் பயன்படுத்தி இலாபம் அடைவதில் இரு ஆலயங்கள் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படுகிறது. மொட்டைப் பிரசுரங்களை வெளியிட்டும் அதனை விளம்பரப்பலகையில் போட்டும் இக்கூத்தாடிகள் கொண்டாடுவதாக கருணலிங்கம் தெரிவித்தார்.

இவ்வாலய நிர்வாகத் தலைமையை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள கடந்த ஏழு ஆண்டுகளாக நிர்வாகசபைத் தலைவராக இருந்த எஸ் கருணலிங்கம் இம்முறையும் தேர்தலில் குதிப்பதைத் தவிர வேறு வழியில்லை எனத் தெரிவிக்கிறார். கருணலிங்கம் புதிதாகப் பலரை உள்வாங்கி உள்ளார். கருணலிங்கத்தை எப்படியாவது வெளியேற்றுவதில் சிவக்குமார் அணியினர் மிகத் தீவிரமாக உள்ளனர். சிவக்குமார் ஆலயக் கட்டுமானத்திலும் ஆரம்ப வளர்ச்சியிலும் பங்கெடுத்தவர். முன்னாள் செயலாளருமாவார். இவருக்குப் பின்னால் ஆலயத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள் பலர் உள்ளனர்.

அடுத்த ஆண்டு ஏப்ரலில் இடம்பெற உள்ள தேர்தலில் கருணலிங்கத்துக்கு எதிராக யாரைக் களத்தில் இறக்குவது என சிவக்குமார் அணியினர் தீர்மானிக்கவில்லை. ஆனால் முன்னர் நிர்வாகத் தலைவராக இருந்த பாலசிங்கத்தை களத்தில் இறக்கலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இதில் இரு தரப்பினரும் கடுமையான குற்றச்சாட்டுகளை எதிர் தரப்பினர் மீது வைத்து உள்ளனர்.

இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக நிர்வாகத் தலைவர் கருணலிங்கம், முன்னாள் செயலாளர் சிவக்குமார், பக்தர்களில் ஒருவர் சயந்தன் பெயர் குறிப்பிட விரும்பாத மேலும் சில பக்தர்களுடன் உதயன் நிருபர்கள் தொடர்பு கொண்டனர். அவர்கள் வைத்த குற்றச்சாட்டுகளும் விளக்கங்களும் கீழே தரப்படுகிறது.

ஆலயம் ஆரம்பிக்கப்பட்டது முதல் ஆலயம் மிகுந்த வளர்ச்சியைப் பெற்று உள்ளது. அதற்கு பலகாரணிகள் இருந்தாலும் கருணலிங்கத்தின் தலைமையிலான நிர்வாகத்தின் பங்கும் கணிசமானது என்பதை மறுப்பதற்கில்லை. பல திட்டங்களுக்கு ஊடாக அவரது நிர்வாகம் தாயகத்து மக்களுக்கு கைகொடுத்து வருகிறது. இங்கும் இளைஞர் அமைப்பு, வயோதிபர் அமைப்பு, தமிழ் பள்ளி, நூல் வெளியீடுகள் நடத்துவது என அவரும் அவரது நிர்வாகமும் பலவகையிலும் சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. ஆனால் சில நியாயமான குற்றச்சாட்டுகளும் உண்டு. தொடர்ச்சியாக தலைமைப் பதவியில் இருப்பது, அதனைத் தக்கவைக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள், பலாத்காரத்தைப் பயன்படுத்த முற்பட்டது, தவறான பிரச்சாரம், நிதி நிர்வாகம் என சில குற்றச்சாட்டுகளும் அவர் மீது உண்டு. அவை பற்றி ஏப்ரல் 15 அன்று ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் அவரைச் சந்தித்து உரையாடினோம்.

சிவக்குமார் நிர்வாகச் செயலாளராகப் பணியாற்றியவர். ஆலயக்கட்டுமானத்தில் முக்கிய பங்கெடுத்தவர். தற்போது சாதாரண பக்தராகவே இருக்கிறார். இவர் செயலாளராக இருந்த காலப்பகுதி முதல் ஆலய வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதி தாயகத்துக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இவர் கருணலிங்கத்தின் தலைமைக்கு மிகுந்த சவாலாக உள்ளார். அவர் செயற்குழுவில் உள்ள என் யோகராஜா, எஸ் நவரட்ணம், லீலா ஆகியோருடன் இணைந்து தனக்கு எதிராகச் செயற்படுவதாக கருணலிங்கம் நம்புகிறார். மேலும் சிவக்குமார் அணியினர் மொட்டைப் பிரசுரங்கள் வெளியிடுவது போன்ற விசமத்தனங்களில் ஈடுபடுவதாகவும் கருணலிங்கம் குற்றம்சாட்டினார். இவை பற்றி சிவக்குமாருடன் ஏப்ரல் 12ல் அவரது இல்லத்தில் வைத்து உரையாடினோம்.

பதவியில் பற்று:

கடந்த 7 ஆண்டுகளாக தலைமைப் பொறுப்பில் இருக்கிறீர்கள். அடுத்த தேர்தலிலும் நீங்களே நிற்கப்போகிறீர்களா? என்று கேட்டதற்கு; "இப்பொறுப்புக்கு நேர்மையும் செயற்திறனும் உள்ளவர்கள் வேண்டும். எமது நிர்வாகத்தில் உள்ளவர்கள் நேர்மையானவர்கள். ஆனால் அவர்களுக்கு இப்பெரும் நிர்வாகத்தைக் கொண்டு நடத்தும் செயற்திறன் போதாது. அதனால் நான் தேர்தலில் நிற்க வேண்டி உள்ளது. மிகுந்த கஸ்டத்தின் மத்தியில் கட்டி எழுப்பி வளர்த்துள்ள இந்த ஆலயத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு." என்று கருணலிங்கம் பதிலளித்தார்.

### கருணலிங்கம் - போல்ராஜ் உறவும் பிணக்கும் :

போல்ராஜ் என்பவரைப் பயன்படுத்தி அவர் மூலம் இளைஞர் அணியை உருவாக்கி முன்னைய தேர்தலில் வென்ற பின் அவர்மீது பாலியல் குற்றம் சுமத்தி பிரசுரம் வெளியிடப்பட்டு உள்ளது. அவரையும் வேறு சிலரையும், இளைஞர்கள் சிலரைப் பயன்படுத்தி மிரட்டி உள்ளீர்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறதே என்று கேட்டோம். அதற்குப் பதிலளித்த கருணலிங்கம் போல்ராஜை தேர்தலுக்குப் பயன்படுத்தியதை முற்றாக மறுத்தார். ஆனால் போல்ராஜ் இளைஞர்கள் பலரையும் ஆலயத்துடன் இணைத்தார் என்பதையும் அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டதையும் கருணலிங்கம் ஏற்றுக்கொண்டார். மேலும் போல்ராஜ் £50 செயற்கைக் கால் திட்டத்துக்கு £2,500 சேர்த்துக் கொடுத்தார் என்பதையும் ஏற்றுக் கொண்டார். ஆனால் போல்ராஜ் சிறு வயதுப் பெண்களுடன் சீண்டுதல் விட்டார் என்று பிரச்சாரம் செய்யப்பட்டது. அதற்கு தகுந்த ஆதாரங்கள் எதுவும் இருக்கவில்லை. அது பற்றி காவல் துறையிடம் முறையிடப்படவில்லை.

நாம் அறிந்தவரை போல்ராஜ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து பணியாற்றி உள்ளார். ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டால் ஊருக்கு வேண்டிய நிதி உதவிகளை ஆலயத்தின் மூலம் செய்ய தயாராக இருப்பதாக கருணலிங்கம் வாக்குக் கொடுத்ததாகவும் அதனால் கிறிஸ்தவரான போல்ராஜ் கருணலிங்கத்தை தலைவராக்குவதற்காக உறுப்பினர்களைச் சேர்த்ததாகவும் போல்ராஜின் பிரதிநிதி உதயனுக்குத் தெரிவித்தார். கருணலிங்கம் உறுதியளித்தபடி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு நிதி அளிக்காததால் போல்ராஜிற்கும் கருணலிங்கத்துக்குமிடையே கசப்புணர்வு ஏற்பட்டதாக தெரியவருகிறது. இதனால் போல்ராஜ் தற்போது கருணலிங்கத்தை அகற்றும் சிவக்குமார் அணியில் நிற்கிறார். இதனால் போல்ராஜ் மீது பாலியல் குற்றம் சுமத்தப்படுவதாக அவரின் பிரதிநிதி உதயனுக்குத் தெரிவித்தார்.

### வன்முறை பயன்படுத்தப்பட்டது :

போல்ராஜ் தன்னை மிரட்டுவதற்கு சில இளைஞர்களை அழைத்து வந்ததாகவும் அவ்விளைஞர்கள் தன்னை காருக்குள் அழைத்துச் சென்று மிரட்டிக் கொண்டிருக்கும் போது அவ்விளைஞர்களின் நண்பர்கள் அங்கு வந்து போல்ராஜ் உண்மையில் பெண்களுடன் பிரச்சினைப்படுபவர் எனத் தெரிவித்து தன்னை விடுவித்துவிட்டு போல்ராஜ் உடன் ஏதோ கதைத்ததாகத் தெரிவித்தார். இக்கதையில் சினிமாத்தனம் இருப்பதாகவே தெரிகிறது. இது பற்றி வேறு சிலருடன் பேசிய போது கருணலிங்கம் தலைமையிலான ஆலய நிர்வாகத்துக்கு சார்பாக சில இளைஞர்கள் செயற்படுவது தெரிய வந்தது. போல்ராஜ் 10க்கும் மேற்பட்ட இளைஞர்களால் காரில் ஏற்றப்பட்டு எச்சரிக்கப்பட்டதும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆலயச் சுற்றாடலில் சிலரின் கார் ரயர்கள் வெட்டப்பட்ட சம்பவங்களும் நடந்து உள்ளது. ஆனால் இது பற்றி பொலிஸில் முறையிடப்படவில்லை. ஆனால் கருணலிங்கம் தான் வன்முறையை எந்தக் கட்டத்திலும் பயன்படுத்தவில்லை என்று மறுத்தார்.

### பிள்ளைகளைத் தத்தெடுத்தலும் உதவிகளும் :

தாயகத்தில் உள்ள அனாதைப் பிள்ளைகளை தத்தெடுத்தவர்களுக்கு தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் சில சங்கடங்கள் ஏற்பட்டதை கருணலிங்கம் விளக்கினார். ஒரு இல்லத்தில் இருந்து சில பிள்ளைகளை மட்டும் தத்தெடுப்பதால் மற்றைய பிள்ளைகளிடம் தாங்கள் அதிஸ்டம் இல்லாதவர்கள் என்ற எண்ணம் ஏற்படும். அது பிள்ளைகளுக்கு இடையே மனத்தாங்கலை ஏற்படுத்தும். அதனால் தத்தெடுக்கும் பணம் ஒரு பிள்ளைக்கு என்று இல்லாமல் குறிப்பிட்ட இல்லத்துக்கே வழங்கப்படுகிறது. அதனால் தத்தெடுக்கும் ஒருவருடன் மட்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்க அவ்வில்லங்கள் முன்வருவதில்லை. இந்நிலையினால் பிள்ளைகளைத் தத்தெடுக்க முன்வந்த பலர் அதனை நிறுத்தி விட்டனர் என்பதை கருணலிங்கம் தெளிவுபடுத்தினார். இது விடயமாக கருணலிங்கத்தின் மீது சிவக்குமார் அணியினர் வைத்த குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் இல்லை.

### நிதி நிர்வாகம் :

ஆலயத்தின் எதிர்காலத்தில் அக்கறை காட்டப்படவில்லை என்றும் திட்டங்களைப் பெற்றுக் கொள்ளாமல் நிதியை வழங்குவதாகவும் சிவக்குமார் குற்றம்சாட்டினார். இக்குற்றச்சாட்டுகளை கருணலிங்கம் முற்றாக மறுத்தார். தங்களுடன் ஒரு நேரத்தை குறித்து சிவக்குமாரோ அல்லது அவர்கள் சார்பில் யார் வந்தாலும் முழுக் கணக்குகளையும் அவற்றின் பகுப்புகளோடு காட்டத் தயாராக இருப்பதாக கருணலிங்கம் தெரிவித்தார். ஆனால் தாங்கள் உதவி வழங்கும் அமைப்புகள் பற்றிய சுயாதீனமான அறிக்கைகளைப் பெறவில்லை என்று தெரிவித்தார். முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் இந்து காலாச்சார அமைச்சின் சிபாரிசுகளில் இவர்கள் தங்கி இருந்து உள்ளனர். மண்ணெண்ணை மகேஸ்வரன் என்று அறியப்பட்ட இவர் மீது பலத்த ஊழல் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. பெருமளவு நிதியை வழங்கி திட்டங்களைச் செயற்படுத்தும் போது சுயாதீன அறிக்கைகளை பெற்று வழங்கப்படும் பணம் சரியான முறையில் தேவையானவர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பது கண்டிப்புடன் உறுதி செய்யப்பட வேண்டும்.

புலம்பெயர்ந்த மக்கள் உதவியாக வழங்கும் ஒவ்வொரு பவுணிலும் 60 - 80 பென்ஸ் வரை நிர்வாகச் செலவுகளுக்கு பயன்படுத்தப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. மேலும் நிதி உதவி பெறும் அமைப்புகள் தங்களுக்கு சார்ந்தவர்களுக்கே உதவிகளை வழங்குவதாகவும் இத்தர்ம அமைப்புகளை தமது குடும்பச் சொத்தாக ஆக்கி வருவதாகவும் குற்றச்சாட்டுகள் உண்டு. கடந்த 3 ஆண்டுகளில் £400,000 வரை நிதி அனுப்பப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வளவு தொகைப் பணத்தை அனுப்பும் போது உதவி வழங்கப்படும் அமைப்புகளுக்கு சுயாதீனக் குழு ஒன்றை அமர்த்தி அவற்றை கண்காணித்து அறிக்கை பெறுவது மிகவும் அவசியம் என்றும் தெரிய வந்துள்ளது.

கருணலிங்கம் உண்டியலை உடைத்து தாள்காசை எடுத்தார் என்றும் வங்கியில் பணம் இல்லாததால் தான் அப்படிச் செய்தார் என்றும் குற்றம்சாட்டப்பட்டது. ஆனால் உண்டியலைத் திறக்கும் போது பலர் அங்கிருந்ததாக சிவக்குமாரே தெரிவித்தார். அதனை ஒரு திருட்டாக காட்ட முற்படுவது பொருத்தமல்ல. உண்டியல் பணத்தை வங்கியில் போட்டுவிட்டு வங்கியில் இருந்து எடுப்பதே வழமை. ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் நேரடியாக உண்டியலில் இருந்து எடுப்பதை திருட்டு என்று கூறிவிட முடியாது. வங்கியில் பணம் இல்லாததால் எடுக்கப்பட்டது என்றும் கூற முடியாது. சரியான முறையில் பதிவுகள் இருக்க வேண்டும் என்பதே கணக்காளர்களின் முடிவு.

### மொட்டைப் பிரசுரங்கள் :

துண்டுப் பிரசுரங்கள் பற்றி இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டுகின்றனர். கருணலிங்கமே துண்டுப் பிரசுரக் கலாச்சாரத்தை அறிமுகப்படுத்தியதாக சிவக்குமார் குற்றம்சாட்டினார். அதனை மறுத்த கருணலிங்கம், சிவக்குமார் போட்டி ஆலய நிர்வாகத்துடன் இணைந்து மொட்டைப் பிரசுரங்கள் வெளியிட்டதாகக் குறிப்பிட்டார். கருணலிங்கம் குற்றம்சாட்டிய போட்டி ஆலயங்களின் நிர்வாகங்களுடன் தொடர்பு இருந்ததையும் தன் பேச்சுக்கு அவர்கள் செயற்படுவார்கள் என்பதையும் சிவக்குமார் வெளிப்படையாகத் தெரிவித்தார். போல்ராஜ் மீதான குற்றச்சாட்டு பெயர் குறிப்பிடப்படாமல் ஆலயப் பிரசுரங்களில் வெளியிடப்பட்டது.

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தில் நிதிமோசடி அல்லது ஊழல் இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. நிர்வாகம் தனது கணக்குகளை காட்டத் தயாராக உள்ளது. ஆனால் தமிழ் அமைப்புகளுக்கே உரிய நிர்வாக ஒழுங்கீனங்கள் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. தேர்தல் நடைமுறைகளில் வாக்காளர்கள் உண்மையை கண்டு வாக்களிக்காமல் பக்கம் சார்ந்து ஒவ்வொரு அணியாகப் பிரிந்து நிற்பதே பல சிக்கல்களுக்கு வழிவகுக்கின்றது. ஒரே நபர் இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் தெரிவு செய்யப்படுவது, ஏகபிரதிநிதியாக ஒருவரை உருவாக்க முயல்வது அனைத்துமே ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளே. ஜனநாயகம் பிறந்த மண்ணில் வாழும் நாம் இன்னும் அதன் ஆரம்பப் பாடத்தைக் கூடக் கற்றுக் கொள்ளாமல் இருக்கின்றோம். ஆலயங்கள் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும். ஆலயம் புனிதமான இடம் என்றால் அதனை நிர்வகிப்பவர்களும் சற்று புனிதமாக இருப்பது நன்றன்றோ.

எது எப்படி ஆனாலும் கத்தரிகாய் முற்றி கடை வீதிக்கு வரட்டுக்குமேன்.

For News & Advertising: 020 8952 5677
For Distributions : 020 8905 7775

# வாயிலும் மூக்கிலும் இரத்தமா? ச்சே.. ச்சே அது ஒன்றுமில்லை - ஆர்சவே ஆலயத்தின் வதந்திகளும் அலங்கோலங்களும்

ஆலயம் 2

ஆச்வே முருகன் ஆலயத்தின் பிரதம நிர்வாகி செல்லத்துரை என்பவரை ஆலயத்தினுள் வைத்துக் கடுமையாக தாக்கப்பட்டதாகவும், அவருடைய மூக்கிலும் வாயிலும் இரத்தம் சொட்ட சொட்ட ஒழுகியதாகவும் அதனை கண்ட செல்லத்துரையின் மனைவி மூர்ச்சையாகி கோவிலின் மாடியிலே விழுந்துவிட்டதாகவும் உதயன் பத்திரிகையின் அலுவலகத்திற்கு அந்த ஆலயத்தின் பக்தர் தொலை பேசியின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதே செய்தி கோயில் வட்டங்களிலும் மற்றும் பொது ஸ்தாபனங்கள் மத்தியிலும் ஏப்பிரல் நடுப்பகுதியில் இரகசியமாகப் பேசப்பட்டு வந்தது. இச்செய்தியின் தாற்பரியத்தை அறிய எமது நிருபர் நேரடியாக செல்லத்துரையுடன் தொடர்பு கொண்டோம். அதனை ஊர்ஜிதப்படுத்த எமது நிருபர் இச்செய்தி பற்றிக் கேட்டதற்கு “எனக்கு அடி விழவும் இல்லை, வலிக்கவும் இல்லை, இரத்தம் வரவும் இல்லை” என செல்லத்துரை பதில் கூறினார்.

ஆலயத்தின் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்ட ஒருவர் பதவிக்காக இவ்வாறான பொய்களை அவிழ்த்து விடுவதாக திரு செல்லத்துரை தெரிவித்தார். ஆலய நிர்வாகத்தில் நிரந்தர உறுப்பினர், தேர்வு உறுப்பினர் என்ற இரு பிரிவினர் உள்ளனர். இதில் தேர்வு உறுப்பினர்கள் தேர்தலில் நின்று வாக்கு அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர். இதில் சில தேர்வு உறுப்பினர்கள், தேர்வு தினத்தன்று கார்களில் மேலும் கீழும் ஓடி சொந்தக்காரரை ஏற்றி இறக்கி தெரிவாகின்றனர். ஆனால் நிரந்தர உறுப்பினருக்கு எதுவித சிக்கலும் இல்லை.

நிரந்தர உறுப்பினராக இருந்த திரு வாமதேவன் என்பவர் அண்மையில் காலமாகியதால் ஒரு பதவி வெற்றிடமாகி உள்ளது. இவ்வெற்றிடமாகியுள்ள பதவியைக் கைப்பற்றவே சிலர் இப்படியான பொய் வதந்திகளை கிளப்பிவிடுகின்றனர் என மேலும் அறியப்படுகின்றது. இந்த நிரந்தர உறுப்பினர் பதவிக்கு முன்னர் ஆச்வே முருகன் ஆலயத்தில் செயலாளராக இருந்து பதவி இறக்கப்பட்ட திரு ரங்கநாதன் முழுமூச்சாக ஓடித்திரிவதாக மேலும் தெரிகின்றது.

திரு செல்லத்துரையின் தலைமையின் கீழ் பிரித்தானிய மகாராணி ஆச்வே கோயிலுக்கு வருகை தந்தமை போட்டியாளர் சிலருக்கு எரிச்சலை கொடுத்திருந்ததாக இன்னுமொரு உறுப்பினர் தெரிவித்தார். இவ்வருடம் யூன், யூலை மாதங்களில் அங்கு தேர்தல் இடம்பெற உள்ளது.

செல்லதுரையின் மீது அடி விழுந்து மூக்கிலும் வாயிலும் இரத்தம் வந்தது என்ற செய்தி உன்மையானதா என்பதை தெரிந்து கொள்ள உதயன் பல வகையிலும் உன்மையை அறிய முயற்சி எடுத்தது. செல்லத்துரையிடமும் விசாரித்தது. செல்லத்துரை சொல்வது உன்மையா இல்லையா என்பது அவரின் மூக்கை தூக்கிப் பார்த்து செய்தி பிரசுரிக்க நேரமில்லை.

# ஆன்மா நிறைவு பெற - பவுண்ஸ் வேண்டும்

லண்டனுக்கு காண்டம் சொல்பவர்களும் சாமிகளும் வந்து போவது வழக்கம். தற்போது ‘தூய ஆவியில் அருள் மழை’, ‘குணமளிக்கும் தேவ நற்செய்தி’ எனக் கூறிக்கொண்டு வேறொரு கோஷ்டி லண்டனுக்குப் படை எடுக்க ஆரம்பித்துள்ளது. இவர்கள் கத்தோலிக்க மதத்தின் அனுசரணையுடன் வந்து லண்டனிலுள்ள தமிழ் தேவாலயங்களுடன் இணைந்து தமது பணியை செய்யாமல் தன்னிச்சையாக (Freelance) தம் இஷ்டப்படி வந்து போகிறார்கள். இவ்வாறாக ஏப்பிரல் நடுப்பகுதியில் தென்னிந்தியாவில் இருந்து FR.Iqnatius S.J இலண்டன் வந்துள்ளார். இவர் தொடர்பான விபரத்தை லண்டனில் உள்ள அமைப்பாளர் வின்சன் ஞானப்பிரகாசத்திடம் வினவிய போது FR.Iqnatius இன் வருகைக்கும் லண்டனில் உள்ள தமிழ் கத்தோலிக்க பணியகத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதை அவர் உறுதி செய்துள்ளார். இது ஏன் என்று வினவிய போது தெளிவாக பதில் கிடைக்கவில்லை.

ஈஸ்றகாம் தமிழ் கத்தோலிக்க உறுப்பினரான யேசுதாசனை உதயன் தொடர்பு கொண்ட போது இவ்வாறு கத்தோலிக்க குருவானவர்கள் தனிப்பட்ட முறையில் வந்து போவதை கத்தோலிக்க திருச்சபை கட்டுப்படுத்த முடியாது எனவும் மதத்தின் நன்மை கருதி சம்பந்தப்பட்டவர்களே திருந்த வேண்டும் எனவும் தெரிவித்தார். FR.Iqnatius இன் வருகை இது முதற்தடவை அல்ல இவர் இதற்கு முன்னரும் வந்து போயுள்ளார். சினிமாக் கலைஞர்கள் இலண்டன் வந்து கலை நிகழ்ச்சிகளை மேற்கொள்வது போல் ‘தூய ஆவியில் அருள் மழை’ பொழிவதும் வருட நிகழ்ச்சியாகி விட்டது.

காண்டம் சொல்கிறோம், குணமளிக்கும் தேவ நற்செய்தி என வருபவர்கள் எல்லோருமே சமூகத்தின் பாதிக்கப்பட்ட நொந்து போயுள்ள மக்களையே குறி வைக்கின்றனர். இவர்கள் தாம் ஏதோ பாவத்தை நீக்கி விட்டுடோம் என்று கூறி பெரும் தொகையில் பணம் கேட்கின்றனர். இது பனையால் விழுந்தவனை மாடெறி மிதித்தது போல் ஆகிவிடுகிறது. இவ்வாறு மூலை முடுக்குகளில் இருந்தும் எதுவித கட்டுக்கோப்பும் இல்லாமல் செயற்படுவது வரும் காலத்தில் ஊழல்களுக்கும் பண மோசடிகளுக்குமே வழி சமைக்கும் என பல கத்தோலிக்கர்கள் லண்டனில் விசனம் தெரிவித்துள்ளனர்.

# 5 கொலைகள் மீதான விசாரணை தொடர்கிறது

இலண்டன் வீதிகளில் இடம்பெற்ற 5 கொலைகள் தொடர்பான விசாரணைகள் இன்னமும் தொடர்வதாக Det Ch Supt Andrew Murphy தெரிவித்தார். கடந்த ஆண்டு மார்ச் 19ல் இல்போர்ட்டில் கொலை செய்யப்பட்ட திலீபன் தங்கவடிவேல், யூன் 8ல் ஈலிங்கிலும் வொன்ஸ்ரட்டிலும் கொலை செய்யப்பட்ட பார்த்தீபன் பாலசிங்கம், கிசோக்குமார் பாலச்சந்திரன், ஓகஸ்ட் 30ல் கொலை செய்யப்பட்ட அசன் ரட்ணசேகரம், இவ்வாண்டு ஜனவரி 11ல் தாக்கப்பட்டு ஜனவரி 14ல் மரணமான மகேஸ்வரன் கனேசன் ஆகியோரது கொலைகள் தொடர்பான விசாரணைகள் இன்னமும் தொடர்வதாக அன்ரு மேர்பி தெரிவித்தார்.

இவ் விசாரணைகளின் தற்போதைய நிலை பற்றிக் குறிப்பிட்ட மேர்பி திலீபன் தங்கவடிவேலின் கொலை தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிசாரால் அறியப்பட்ட சந்தேக நபரைத் தேடுவதாகவும் குறிப்பிட்டார். கிசொக்குமார் பாலச்சந்திரனின் கொலை தொடர்பாக நால்வர் மீது கொலைக் குற்றம் பதிவு செய்யப்பட்டு உள்ளது. பார்த்தீபன் பாலசிங்கத்தின் கொலை தொடர்பாக இன்னுமொரு சந்தேகநபரை விசாரிக்க வேண்டி உள்ளதாகக் குறிப்பிட்ட மேர்பி யூலை மாதம் இவ்வழக்கு விசாரணைக்கு வர உள்ளதாகக் குறிப்பிட்டார். அசன் ரட்ணசேகரத்தின் கொலை தொடர்பாக ஒருவர் மீது கொலைக் குற்றம் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இன்னுமொரு சந்தேக நபரை பொலிசார் விசாரணைக்காகத் தேடுகின்றனர். மகேஸ்வரன் கணேசனின் கொலை தொடர்பாக ஒருவர் மீது கொலைக் குற்றம் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இன்னும் சில சந்தேக நபர்களை பொலிசார் விசாரணைக்காகத் தேடுகின்றனர்.

வட கிழக்கு இலண்டனில் தமிழ் இளைஞர் குழுக்கள் மோசமான வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்ட மேர்பி அப்பகுதியில் உள்ள 3 உள்ளாட்சி மன்ற காவல்துறைகளும் இணைந்து செயற்பட்டு குற்றச்செயல்களை குறைத்து தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாகத் தெரிவித்தார்.

ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையால் தமிழ் இளைஞர் குழுக்களின் மத்தியில் மோசமான குற்றச்செயல்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதாக மேர்பி தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் மெற்றோ பொலிட்டன் பொலிசார் தகவல்களைத் திரட்டுவதிலும் முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதிலும் தற்போது நல்ல நிலையில் உள்ளதாகத் தெரிவித்தார். சில கொலைகள் இடம்பெறாமல் பொலிசார் தடுத்ததாகவும் மேர்பி உறுதியாகத் தெரிவித்தார். தமிழ் சமூகத்திடம் இருந்து கிடைத்த ஆதரவால் தான் இதனைச் செய்யக் கூடியதாக இருந்ததாகத் தெரிவித்த அவர் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மெற்றோபொலிட்டன் பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.


# சோமநாத குருக்களின் பலாத்கார கற்பழிப்பு வழக்கு சிவஸ்கந்தகிரி ஆலயம் கை மாறியது

ஆலயம் 3

பாலியல் பலாத்கார வழக்கில் சம்பந்தப்பட்ட சிவஸ்கந்தகிரி முருகன் ஆலயம் கைமாறி உள்ளது. தொரன்றன்கீத், குரொய்டனில் உள்ள இவ்வாலயம் வெஸ்ரேன் ஜுவலர்ஸ் உரிமையாளர் சிவசுந்தரத்திற்கு உரிமையானதாக இருந்தது. மார்ச் இறுதிப் பகுதியில் அவ்வாலயத்தின் பிரதான குருக்கள் பாலியல் பலாத்காரம் தொடர்பாக ஆலயத்தில் இருந்து புலனாய்வு அதிகாரிகளால் விலங்கிட்டு அழைத்துச் செல்லப்பட்டார். தற்போது இவரது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளது.

பாலியல் வழக்கு :

இரு குழந்தைகளுக்குத் தந்தையான சோமநாதக் குருக்களே சிவஸ்கந்தகிரி முருகன் ஆலயத்தில் வைத்து மார்ச் பிற்பகுதியில் கைது செய்யப்பட்டார். மொறிசியஸ் பெண்ணொருவரைப் பாலியல் பலாத்காரம் புரிந்ததாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. இவரது சகோதரர் நாகநாதக் குருக்கள் ஈஸ்றகாம் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் பிரதான குருக்களாக இருக்கிறார். ஏப்ரலில் நீதிமன்றத்துக்கு நாகநாதக் குருக்களே குற்றம் சுமத்தப்பட்ட



சோமநாத குருக்கள்

தனது சகோதரனை அழைத்து வந்தார். சோமநாதக் குருக்கள் இலண்டன் முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் வேலை செய்திருந்தார். ஆலயத்தின் தலைமை நிர்வாகி சீவரத்தினம் பொலிஸ் தரப்பில் சாட்சியமளிக்க உள்ளார்.

ஆலயம் கை மாறியது :

வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்திலேயே சிவஸ்கந்தகிரி ஆலயம் கை மாறி உள்ளது. இது பற்றி வெஸ்ரேன் ஜுவலர்ஸ் உரிமையாளர் சிவசுந்தரத்திடம் கேட்டபோது ஆலயம் கோபி என்பவரிற்கு விற்கப்பட்டதை உறுதிப்படுத்தினார். மேலதிக தகவல்கள் எதையும் அவர் வெளியிட மறுத்துவிட்டார்.

# கனடிய தமிழ் சமூகத்தில் வன்முறை - ஸ்கொட்லண்ட் யாட் ஆய்வு

மேற்கு நாடுகளில் தமிழ் இளைஞர்களின் வன்முறைக்கு பெயர்பெற்ற தலைநகர் கனடா. அங்கு இளைஞர்களின் வன்முறை எப்படி பொலிசாரால் கையாளப்படுகிறது என்பதை அறிய Det Ch Supt அன்ரு மேர்பி கனடாவுக்குச் சென்றிருந்தார். கனடாவில் உள்ள வன்முறைக்குழுக்கள் அல்லது தெருக்குழுக்கள் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இலண்டனில் இக்குழுக்கள் மீது சாதாரண சட்ட வரைமுறையின் கீழேயே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இன்று இலண்டனில் உள்ள தமிழ் இளைஞர் குழுக்களின் நிலையே 10 ஆண்டுகளுக்கு முன் கனடாவில் காணப்பட்டதாக அன்ரு மேர்பி தெரிவித்தார். தற்போது கனடாவில் உள்ள இந்த வன்முறைக் குழுக்கள் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டு பெரும் குழுக்களாகக் காணப்படுவதாகவும் அதே நிலை இலண்டனிலும் ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்தார். இலண்டனிலும் மோசடிகளில் ஈடுபட்ட சிலர் அதன் மூலம் வர்த்தக நிலையங்களை வாங்கி தங்களை வளர்த்துக் கொண்டு தங்களுக்கு என்று ஒரு குழுவை அமைக்க முற்படுவதாகவும் அதனைத் தடுப்பதில் ஸ்கொட்லண்ட் யாட் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## அன்ரு மேர்பியின் கனடா அனுபவம் :

கனடாவில் காணப்பட்ட வன்முறைக்குழுக்கள் - Gangs இலண்டனில் உள்ளதை பிரதிபலிப்பதாகவே உள்ளது. ரொறன்ரோவில் பிரதானமாக இரண்டு குழுக்கள் இருந்தன. அவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் LTTE உடன் தொடர்பைக் கொண்டிருந்ததாக குற்றம்சாட்டப்படுகிறது. குழுவன்முறைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்து கொலைகளும் நடந்தது. அங்கும் வாள் போன்ற கூரான ஆயுதங்களே தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்டது. கொடூரமானவையாக இருந்தபடியால் வழமையாக yardies அல்லது hell angels இருந்த இடங்களை தமிழ் இளைஞர் குழுக்கள் பிடித்தன.

கனடியப் பொலிசாரும் எங்களைப் போன்றே தேவைக்கு எற்ப நடவடிக்கை எடுத்தனர். ஒப்பிறேசன் என்வர் நடவடிக்கை போன்ற ஒன்றை பொலிசாரும் குடிவரவு அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்டனர். 9 மாதங்கள் புலனாய்வுத் தகவல்களைத் திரட்டி பின்னர் 60 பேரை கைது செய்தனர். ஆனால் இருவர் மட்டுமே திருப்பி அனுப்பப்பட்டனர். கனடாவில் இந்தக் குழுக்கழுக்கு பாடசாலைகளில் இருந்து புதிய உறுப்பினர்கள் சேர்வதைத் தடுக்க Youth Diversion அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இங்கும் கனடாவிலும் பணமே குழு நடவடிக்கைகளுக்கு காரணமாக உள்ளது. பல்வேறு வகைப்பட்ட மோசடிகள் பெரும் பிரச்சினையாக உள்ளது. பிரித்தானியாவைப் போல் கனடாவிலும் மோசடிகளில் கிடைக்கும் இலாபம் எங்கு செல்கிறது என்பது தெரியவில்லை. பயங்கரவாதத்தை மேற்கொள்ள இது பயன்படுத்தப்படுகிறது என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை. - Det Ch Supt அன்ரு மேர்பி.

INDIAN FUNERAL DIRECTORS
We now operate from our new, modern & fully equipped premises on Mollison Way, Edgware.
Our comprehensive service includes:-
- Large prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
- All religious rites, ceremonies and wishes respected and administered
- Modern, fully equipped washing & dressing facilities
- Funeral ceremony items provided

Tel: 020 8952 5252
SANJAY or BHARAT SHAH (formerly of Kenton Road)
44 South Parade, Mollison Way, Edgware,
Middlesex HA8 5QL.
MOBILE: 0777 030 66 44

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

**MASSIVE SALE**





**MASSIVE SALE**

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*

**50% discount off RRP**




**£2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR**
**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

# தமிழ் வர்த்தகர்கள் மீது நிர்ப்பந்தம்

தமிழ் வர்த்தகர்கள் இளைஞர்களின் கிரடிட் காட் களவு மற்றும் வன்செயல்களால் பாதிக்கப்படுவதாக பொலிசாரிடம் முறையிடப்பட்டு உள்ளது. வன்முறை நடவடிக்கைகளின் போது தமிழ் கடைகளில் தங்களது ஆயுதங்களை மறைத்து வைக்க தமிழ் வர்த்தகர்கள் நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் களவாடப்பட்ட கிறடிட் காட்களை பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் முறையிடப்பட்டு உள்ளதாக மெற்றோபொலிட்டன் பொலிஸ் உயர் அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட வர்த்தக மையங்களுக்கு அண்மையில் CCTV போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளதாகவும் இந்த வகையான குற்றச்செயல்களை இளைஞர் குழுக்களின் வன்முறையுடன் இணைத்தே அணுகுவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

# சுத்தம் சுகம் தருமா?

## ஒவ்வாமை அல்லது அலர்ஜி பிரித்தானியாவைத் தாக்குகிறது

30 ஆண்டுகளுக்கு முன் பெரும்பாலும் அறியப்படாத Hevey fever, asthma ஒவ்வாமை அல்லது அலர்ஜி நோய்கள் இன்று மிகுந்த பிரச்சினையாக உருவாகி உள்ளது. இன்று மூன்றில் ஒருவர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளனர் என அலர்ஜி யுகே எனும் அமைப்பு மதிப்பிட்டு உள்ளது. இன்னும் 10 ஆண்டுகளில் பிரித்தானிய சனத்தொகையின் 50வீதமானவர்கள் அலர்ஜியினால் பாதிக்கப்படுவார்கள் என அவ்வமைப்பு மதிப்பிட்டு உள்ளது.

அதுக்குப் பயம், இதுக்குப் பயம் எல்லாமே பயமயம் என்பது போல் இன்று சுற்றாடலில் உள்ள பல பொருட்களால் அலர்ஜி ஏற்பட்டு எல்லாமே அலர்ஜி மயமாகிறது. தூசி (அதில் உள்ள நுண்ணுயிர்), சவர்க்காரம் மற்றும் சுத்தப்படுத்தப் பயன்படுத்தும் இரசாயனப் பொருட்கள், பூடு, கிபி போன்ற பழவகைகள், கடலுணவுப் பொருட்கள், முட்டை, பால், வீட்டு விலங்குகளின் மயிர்கள், மலர்களின் மகரந்தம், லக்ரொக்ஸ் கையுறைகள், சில மருந்துகள் என்பன ஒவ்வாமைக்கு காரணமாகிறது.

பக்ரீரியா மற்றும் வைரஸ் கிருமிகளால் தாக்கப்படும் போது எமது உடல் அக்கிருமிகளுக்கு எதிரான அன்ரி பொடிஸ்சை உற்பத்தியாக்கி அக்கிருமிகளை அழிக்கிறது. சில சமயங்களில் உடலுக்கு தீங்கற்ற மகரந்தங்களை இந்த அன்ரிபொடிஸ் ஆபத்தானவை என எண்ணி கெஸ்ரமைன்ஸ் என்ற இரசாயனப் பதார்த்தத்தை வெளிவிடுகின்றது. இவ் இரசாயனப் பதார்த்தம் ஒவ்வாமைக் குணங்களான சொறிவு, சொரசொரப்பை ஏற்படுத்துகின்றது. சாதாரண நிலையில் அன்ரி கெஸ்ரமைன்ஸ் மாத்திரைகளை எடுப்பதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்தலாம்.

நவீன இல்லங்கள் அதிகப் படியான துப்பரவாக இருப்பதாலும் குழந்தைகள் கூடிய துப்பரவுடன் வளர்க்கப்படுவதாலும் இயற்கைச் சூழலுடன் அவர்கள் போராடுவதில் இருந்து தடுக்கப்படுவதே தற்போது ஒவ்வாமை அதிகரிப்பதற்கு காரணம் என்கிறது அலர்ஜி யுகே அமைப்பு. அடிக்கடி நீராட்டி, சுத்தமாக இருக்கும் கைக் குழந்தைகளில் எக்சிமா, அஸ்த்மா நோய்கள் அதிகம் ஏற்படுவதாக தற்போது அறியப்பட்டு உள்ளது. சிறுவர்கள் வீட்டிற்குள்ளே தொலைக்காட்சிகளுக்கும் கணணிகளுக்கும் முன் இருக்கவிடாமல் சுற்றுச் சூழலுடன் தொடர்புகொள்ள வைக்கப்பட்டு தங்களது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என அலர்ஜி யுகே ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சுத்தம் சுகம் தரும். ஆனால் அதீத சுத்தமும் உடலுக்குத் தீங்கானது. அது தான் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

பிரித்தானியாவில் அஸ்த்மாவினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வாராவாரம் 20,000 ஆல் அதிகரிக்கிறது. இவர்களில் மூன்றில் ஒருவர் 13 - 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள். இந்நோயினால் ஆண்டுதோறும் 1,500 பேர் பலியாகின்றனர்.

# Tikka மசாலா உடலுக்குத் தீங்கு

பிரித்தானியர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் அடைந்து வரும் இந்திய கறி உணவுகளில் உடலுக்கு தீங்கான இரசாயனங்கள் சேர்க்கப்படுவதாக பிரித்தானிய உணவுத்தர நிர்ணய முகவரகம் தெரிவித்து உள்ளது. கறி உணவுகளின் வர்ணங்களை பளிச்சிட வைப்பதற்கு சேர்க்கப்படும் செயற்கை வர்ணங்களில் ரசாயனங்களின் அளவு அனுமதிக்கப்பட்ட அளவிலும் பார்க்க நான்கு மடங்கு அதிகமாக இருப்பதாக அவ்வமைப்பு தெரிவித்து உள்ளது. 102 இந்திய கறி உணவகங்களில் இருந்து எடுக்கப்பட்ட சிக்கின் ரிக்கா மசாலா ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதில் 52 உணவகங்கள் உடல்நலத்திற்கு கேடாக செயற்பட்டது தெரியவந்து உள்ளது. மேற்படி இரசாயனங்கள் ஆஸ்த்மா மற்றும் புற்றுநோய்க்கு காரணமாக உள்ளது. சில நாடுகள் இவ்விரசாயனங்களை முற்றாகத் தடைசெய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# வீட்டுக் கொள்வனவில் முத்திரை வரி ஏமாற்றுபவர்களை வரி அதிகாரிகள் குறி வைக்கின்றனர்

வீடுகளை வாங்கும் போது செலுத்த வேண்டிய முத்திரை வரியை குறைப்பதற்கு வீட்டு விலைகளை குறைத்து அதிகாரிகளை ஏமாற்றுபவர்களை இன்லன்ட் ரெவனியூ குறிவைத்து உள்ளது. £60,000 குறைவான பெறுமதியான வீடுகளுக்கு முத்திரை வரி விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. £60,000 - £250,000 பெறுமதியான வீடுகளுக்கு கொள்விலையில் ஒரு வீதம் முத்திரை வரி செலுத்த வேண்டும். £250,000 - £500,00 பெறுமதியான வீடுகளுக்கு 3 வீதமும் £500,000க்கு அதிகம் பெறுமதியான வீடுகளுக்கு 4 வீதமும் முத்திரைவரியாக செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக £250,000 பெறுமதியான வீட்டைக் கொள்வனவு செய்பவர்கள் 3 வீத வரி செலுத்துவதைத் தவிர்க்க விலையை சற்றுக் குறைத்தும் மறைமுகமாக சில ஏற்பாடுகளைச் செய்தும் வரி அதிகாரிகளை ஏமாற்றுகின்றனர். இவர்களை குறிவைத்துள்ள அதிகாரிகளுக்கு தற்போது அது பற்றி விசாரிக்க அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டு உள்ளது. அதன்படி வரி அதிகாரிகள் வீட்டை கொள்வனவு செய்தவர்களையும் அவர்களது சட்டத்தரணிகளையும் நேரடியாகச் சந்தித்து விசாரணை செய்ய முடியும்.

ஏமாற்றி உள்ளார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டால் முத்திரைவரி இரட்டிப்பாகும். அதன்படி அபராதம் பல ஆயிரம் பவுண்கள் செலுத்த வேண்டி ஏற்படும். தற்போது வீடு கொள்வனவு செய்பவர்கள் 8 பக்க ஆவணம் ஒன்றில் கையெழுத்திட்டு இன்லன்ட் ரெவனியூவுக்கு அனுப்ப வேண்டும். கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு 30 நாட்களில் முத்திரைவரி செலுத்தப்படா விட்டால் £100 அபராதம் விதிக்கப்படும்.

இப்புதிய நடைமுறைகள் வீட்டு கொள்வனவை கடினமாக்குவதாக குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. மேலும் சட்டத்தரணிகள் புதிய ஆவணங்களை நிரப்ப வேண்டி உள்ளதால் அதற்கான செலவீனமும் அதிகரித்து உள்ளது.

# முத்தமிழ் விழா 2004

முத்தமிழ் விழா 2004 ஏப்ரல் 17ம் திகதி சிவயோக கலை அரங்கத்தில் நடைபெற்றது. காலை முதல் மாலை வரை பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் விருது வழங்கல்களும் இடம்பெற்றது. இவ்விழாவுக்கு இலங்கையில் இருந்து செஞ்சொல் செல்வர் ஆறு திருமுருகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

# ரப் தண்ணியை காசாக்கும் கொக்கோ கோலா

கொக்கோ கோலா நிறுவனம் வீட்டுக்கு வரும் ரப் தண்ணீரை போத்தல்களில் அடைத்து இயற்கையாகப் பெறப்பட்ட நீரென விற்பனை செய்துள்ளது. 95 பென்சிற்கு டாசானி என்ற பெயரில் விற்கப்படும் 500மிலி தண்ணீரப் போத்தல்கள் தென்கிழக்கு இலண்டனில் உள்ள தொழிற்சாலையில் அடைக்கப்படுகிறது. இதன் பிரதான நீர் விநியோகம் தேம்ஸ் வோட்டர் நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. ரப் தண்ணீரைக் காட்டிலும் சில ஆயிரம் மடங்கு விலையுடைய இந்த தண்ணீர் போத்தல்கள் நுகர்வோரை முட்டாள்கள் ஆக்கும் செயல் எனக் கண்டிக்கப்பட்டு உள்ளது.

AmmA
Modern Asian Cuisine, Fully Licenced Bar & Restaurant
திறந்த சமையலறை கொண்ட உணவகம்
90 இருக்கைகளைக் கொண்ட குளிரூட்டப்பட்ட உணவகம்

Tel : 020 8772 7146
Fax : 020 8682 0077
138 Mitcham Road, Tooting SW17 9NH
7 DAYS 11.00 AM to 12.00 MIDNIGHT

GOPARA GNANAM TEXTILES
வெகு விரைவில் GOPARA GNANAM ஸ்தாபனத்தார் பெரிய தெருவில் புதிய பிரம்மாண்டமான காட்சியறையில் புதிய பரிணாமத்துடன் 100+98 Upper Tooting Roadல் திறக்க உள்ளனர்.
020 8682 4004
100 & 98, Upper Tooting Road, London SW17 7EN

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS gifts Souvenirs and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

இறையருள் அரசி அன்னை காயத்ரி

வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கிட வல்லவர் இறையருள் அரசி அன்னை காயத்ரி.
உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பிணி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்
020 8952 7775

RehncyShaheen
Chartered Accountants
www.rehncyshaheen.com
Our Services include
* Auditing
* Cashflow & Management Accounting
* Client Accounting Services
* Business Start-up
* Back Duty Investigation (Tax & VAT)
* Taxation
For Information:
Mr. Rehncy MA FCA FCCA CTA AIIT MCMI ACIArb
Middx. Offices: 020 8864 9065 020 8813 8324
1276/1278 Greenford Road, Greenford, Middx UB6 0HH.
Mr. A M Shaheen MA LLB ACEA MCMI
South London Office 020 7223 8221
189 Lavender Hill, London SW11 5TB

DUBAI SPECIAL OFFERS
3 NIGHTS OFFERS
3★ Golden Sands Apts. £299
4★ Oasis Beach Resort £354
5★ Taj Palace £354
5★ Jumeirah Beach £439
www.traveldubai.co.uk
7 NIGHTS OFFERS
4★ Metropolitan City £364
Beach Access
5★ Jebel Ali £439
Inc Flights, Transfers & Breakfast (not inc Golden Sands). Limited availability. Conditions apply. Departures upto 24 AUG.
AIR TRAVEL Corporation
0870 748 7474
www.airtravelcorp.co.uk
WORLDWIDE FLIGHTS
Madras £419 Columbo £364
New York £234 Mumbai £319
Orlando £419 Nairobi £399
Los Angeles £379 Singapore £369
CALL FOR OTHER DESINATIONS
Plus taxes. Early July Departures. Limited availability. Conditions apply.
Air Travel Corporation, Hammond House, 2 Bonnersfield Lane, Harrow, Middlesex HA1 2JR. sales@airtravelcorp.co.uk www.airtravelcorp.co.uk Agents for ATOL protected holders TTA: R454X

# தேசிய வாதத்தை உசுப்பி உள்ள இலங்கைத் தேர்தல்

## எழுதுபவர் : வி சிவலிங்கம் (அரசியல் ஆய்வாளர்)



வி சிவலிங்கம்

ஏப்ரல் மாதம் 2ம் திகதி இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் திறந்திருக்கிறது. 20 வருட காலத்திற்கு மோலான ஆயுதப் போராட்டம், தூங்கிக் கிடந்த பல தீய சக்திகளுக்கு உயிரூட்டி உள்ளது. மார்க்சியக் கொள்கைகளை தமது வழிகாட்டல் தத்துவமாகக் கொண்டிருந்த ஜேவிபியினர் தற்போது தமது தத்துவார்த்த அணுகுமுறைகள் பௌத்த மத சிந்தனையில் இருந்து உதித்ததாக நியாயப்படுத்த முனைந்து உள்ளனர். தேசிய பொருளாதார நிர்மாணம் என்பது தேசிய வளங்களைப் பயன்படுத்துவதும் அதன் மூலம் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி தேசிய செல்வத்தைப் பெருக்குவதுமே என வாதிடுகின்றனர். இதன் அடிப்படையிலேயே வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கத் திட்டமிட்டு உள்ளதாகவும் தெரிவித்தனர். 39 ஆசனங்களைப் பெற்று மூன்றாவது பெரிய கட்சியாக மாறியுள்ள ஜேவிபியினர் விவசாயம் மீன்பிடி, நீர்ப்பாசனம் போன்ற முக்கிய துறைகள் உள்ளடங்கிய அமைச்சுகளைத் தம்மிடம் தருமாறு வற்புறுத்தி வருகின்றனர்.

உள்ளூரில் உற்பத்தியாகும் மார்க்சிசம் எனத் தமது கொள்கைகளை வர்ணித்து வரும் ஜேவிபியினர் சிங்கள தேசியவாதத்துக்கு புதிய போர்வையைப் போர்த்தி உள்ளனர். தொழிலாளர் வர்க்க ஆட்சியை உருவாக்கி அதன் மூலம் சோசலிச சமூகத்தை நிர்மாணிப்பதாகக் கூறி வந்தவர்கள் இன்று பௌத்த தேசியவாதத்தை தமது ஆயுதமாகக் கொண்டு தமது அரசியல் முன்னெடுப்பை ஆரம்பித்து உள்ளனர். திறந்த பொருளாதார நடைமுறைகளும் தனியார் மயப்படுத்தலும் தொழிற்சங்க ஒடுக்கு முறையும் இன்று சர்வதேச ஒழுங்காக மாற்றி உள்ள நிலையில் இதற்கு மாறாக சிங்கள பௌத்த தேசியவாதத்தை முன்னெடுத்து மக்களை ஒரு முகப்படுத்தி இருப்பது ஒருவேளை இன்றைய தேவைக்குப் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் இத்தேசியவாதம் அதன் எல்லையைத் தாண்டி ஏனைய சமூகங்களின் தேசியத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமையுமானால் அதுவே தேச அழிவுக்கு வழிவகுக்கும்.

ஜேவிபியினது தேசியவாதம் ஒருபுறம் தொடர மறுபுறம் சிங்கள பேரினவாதத்தின் குரல் ஜாதிக ஹெல உறுமய என்ற பெயரில் தோற்றம் பெற்று உள்ளது. பேரினவாதம் இன்று அதிதீவிரவாத நிலைக்குச் சென்று பிக்குகள் பாராளுமன்றம் செல்லும் அளவுக்கு மாற்றம் பெற்று உள்ளது. பாராளுமன்றம் தற்போது தேசியவாத சக்திகளால் நிரப்பப்பட்டு உள்ளது. தமிழ் தேசியவாதத் தலைமைகள் பாராளுமன்றத்தில் எவ்வாறு இச்சக்திகளைச் சமாளிக்கப் போகின்றனர்? எவ்வாறு தமது கோரிக்கைகளை வென்றெடுக்கப் போகின்றனர்.


தேர்தல் முடிந்த சில வாரங்களிலேயே இத்தேசிய வாதத்தின் கோர முகங்கள் படிப்படியாகத் தலைகாட்டத் தொடங்கி உள்ளன. ஐ தே முன்னணியின் தோல்விக்குப் பின்னாலும் விடுதலைப் புலிகள் மத்தியில் ஏற்பட்ட பிளவுக்குப் பின்னணியிலும் இந்தியா செயற்பட்டதாக ஐக்கிய தேசிய முன்னணியினதும் விடுதலைப்புலிகளினதும் ஆதரவு ஊடகங்கள் குற்றம் சாட்டுகின்றன. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கலைத்து சமாதான முயற்சிகளையும் தடுத்தது இரு சாராருக்குமே கவலை தரும் பிரச்சினையாக அமைந்திருந்தது.

தேர்தலின் பின்னர் புதிய பிரதமர் இந்தியாவின் பங்கு நேரடியாக இருத்தல் வேண்டும் எனத் தெரிவித்து இருப்பது இரு சாராருக்குமே பெருத்த இடியாக அமைந்து உள்ளது. சமாதான முயற்சிகள் குறித்து இந்தியாவுக்கு சில கருத்துகள் உண்டு எனத் தேர்தலின் பின்னர் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தெரிவித்து இருப்பதும் இத்தேசியவாத சக்திகளிடையே இணைப்புகளை ஏற்படுத்தத் தவறவில்லை.

இந்தியாவின் சமீபத்திய போக்குக் குறித்து ஐக்கிய தேசிய முன்னணியின் மத்தியிலும் விடுதலைப் புலிகள் மத்தியிலும் ஏற்பட்டு வரும் புரிந்துணர்வும் அதேவேளை ஐக்கிய சுதந்திர முன்னணியினர் இந்தியா நோக்கிச் செல்வதும் புதிய தேசியவாதக் கூட்டணியின் உருவாக்கத்திற்கான அறிகுறியாகவே உள்ளன. தமிழ், சிங்கள ஊடகங்கள் மத்தியில் இந்தியா தொடர்பாக எழுந்து வரும் உடன்பாடுகள் தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையலாம் எனத் தோன்றுகிறது.

# பொதுப் பணத்தில் பந்தா

## எழுதுபவர் : வாசுதேவன் (வானொலி, நாடக, சினிமாக் கலைஞர்)



வாசுதேவன்

நான் சார்ந்த தமிழ் அவைக்காற்றுக் கழகம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் ஏப்பிரலில் நடாத்திய விழாவில் ஒரு சிறுவர் நாடகத்தை மேடையெற்ற இருந்தனர். கல்லூரிக்கு உதவும் நோக்கோடு £20 குடும்ப ரிக்கற்றுடன் என் குடும்பத்தையும் கூட இழுத்துச்சென்றேன். நாம் எதை செய்தாலும் எதற்காக செய்கிறோம் என்பதில் தான் செய்வதற்கான அர்தமே உள்ளது. நான் அண்மையில் தயாகம் சென்று வந்த போது என்னை பாதித்த மிக மோசமான விடயம் ஒரு நகரின் நிலை. 20 வருடங்களின் பின் அந்த ஊரை தாண்டும் போது இந்த ஊர் நிலை கண்டு உண்மையில் என் மனம் மட்டுமல்ல என்னுடன் பயணித்த அனைவரினதும் கண்கள் பனித்தன. அந்த நகரத்தின் முழுக் கட்டிடங்களிலும் குண்டுகளின் சல்லடை. பல கட்டிடங்கள் இருந்த இடம் கூடத் தெரியவில்லை. தெருவோரம் இருந்த ஒவ்வரு வீடுகளிலும் யுத்த சுவடுகள். யாழ் குடாவின் முக்கிய நகரங்களில் ஒன்றான சாவகச்சேரி என்ற அந்த நகரம் ஒரு சுடுகாடகாவே அன்று என் கண்ணில் தெரிந்தது. இந்த ஊரில் எனக்கு எந்த வித சம்பந்தம் இல்லாவிடினும் அன்று முதல் அந்த ஊரில் ஏனோ ஒரு அனுதாபம். அதனால் தான் நான் குடும்பத்துடன் விழாவுக்குச் சென்றேன்.

நிகழ்ச்சி மண்டபத்துள் நுழைகையில் பலத்த அதிர்ச்சி. வெள்ளை கறுப்பு இனத்தவர்கள் மண்டப வாயிலிலும் வழி காட்டவும் நின்றார்கள். ஏதோ வேறு விழாவுக்கு வந்து விட்டேனா என்ற சந்தேகத்துடன் வாசலில் நின்ற வெள்ளை இன ரிக்கற் பரிசோதகரிடம் வினவியபோது; அவர் நான் சரியான மண்டபத்திற்கு தான் வந்துள்ளேன், என்பதை உறுதி செய்தார். சரி பாதுகாப்புக்காக சிலவேளை இவரைகளை அமர்தியிருக்கலாம் என்ற மண்டபம் உள்ளே நுழைந்த எனக்கு இன்னமும் அதிர்ச்சி காத்திருந்தது. என்னை அழைத்து சென்று சரியாக இருக்கையைக் காட்டியவரும் நம்மவர் அல்ல அவரும் வேற்று நாட்டவர். என்ன இப்படி என்று அவரிடம் கதை கேட்க தாம் இந்த பாட்டி ஓர்கனைசேர்ஸர்ஸ் - விழா ஒழுங்குபடுத்துபர்கள் என்றார்.

தலை விறைக்க 20 பவுணுக்கு ஒதுக்கப்பட்ட பின் வரிசை ஆசனத்தில் அமர்ந்தேன். ஆனால் விழா மேடையை காணவில்லை. காரணம் மண்டபத்தின் முன் அரைவாசிப்பகுதி 50 பவுண் பணக்காரருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. காசு கூட கொடுததால் முன் வரிசை ஆசனம். இது வழமை, ஆனால் இவர்கள் முன் வரிசை ஆசனங்களை ஒரு கல்யாண வீட்டு வரவேற்பு நிகழ்வுக்கு ஏற்ப சோடனை செய்தது ஏன் என்றுதான் புரியவில்லை. ஒரு மேசை, அதைச் சுற்றி கதிரைகள் பிறகு அதிலை பலூன்கள். மேடையை பாரக்க பலூன்களை விலத்தித் தான் பார்க்க வேண்டும். பார்ட்டியா கலைவிழாவா அல்லது அதை செய்தவர்களின் பந்தாவா ஒன்றும் புரியவில்லை.

பாடசலை கட்டடத்திற்கு நிதி போய்ச்சேரும் என்று துண்டுப் பிரசுரத்தில் இருந்தது. அனால் விழா ஒழுங்கு செய்த விதம், அதற்குச் செய்த வீண் ஆடம்பர செலவுகளை பார்க்கையில் மக்கள் கொடுத்த பணம் பந்தாவுக்கு நன்கே விரயமானதைக் காண முடிந்தது. நம்மவர்கள் அதாவது அந்த பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட பலர் கோட் சூட்டுடன் நல்ல துலக்கமாக கை கட்ட நின்றனர். வாடகைக்கு அமர்தப்பட்ட வேற்று நாட்டவர்கள் சாப்பாடு சிற்றுண்டி வழங்குதல் போன்ற நடிவடிக்கையில் மும்மரமாக நின்றனர். கோட்-ரை பேர்வழிகள் நன்றே அவர்களை மேய்த்தனர். கொடுத்த காசுக்கு இதையும் செய்யாவிடின் நான் எனது ஊருக்கு என்ன செய்தேன் என்று கேட்கப்படாது தானே. இரவு சாப்பாடும் ரேக்எவே ஸ்ரைலில் வாடகை தொழிலாளர்கள் நன்கே பரிமாறினர். பந்தா இத்துடன் முடியவில்லை. அந்த நிகழ்ச்சிகளை நடாத்த வந்த கலைஞர்களை மேய்பதிலும் இந்த போறை பேர்வழிகள் பின்னிக்கவில்லை.

அறிவிப்பாளராக அழைக்கப்பட்ட எஸ் கெ ராஜனை, குடும்பத்துடன் வாசல் வரை கூட்டி வந்து 'உ.திலை நில்லுங்கோ' என்று சொன்னவரை விழா முடியும் மட்டும் காணவில்லை. ரிக்கற் பரிசோதகர்கள் அவரை நுழைய அனுமதிக்கவில்லை. எஸ் கே ராஜன் வந்தவழியே திரும்பிவிட்டார். பின்னர் விழாவை நடத்த அறிவிப்பாளர் இல்லாமல் திண்டாடினர். நடன நிகழ்ச்சிக்கு வந்த ஒரு பிள்ளையின் தந்தை 'ஏன் எல்லாரும் ஒண்டா வரேலாதோ' என்று அவமதிக்ப்பட்டார். மேடையில் நிலைமை இதை விட மோசம் ஆளுக்கொரு நிகழ்சி. அதுக்கு மட்டும் அவர் சப்போட். 25 வருடகாலமாக நாடகங்களை தொடரந்து மேடையேற்றும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினரின் நாடகத்தில் நடித்த அந்த சிறு குழந்தைகளின் பெயரை நாடகம் முடிந்ததும் அறிவித்தது தேவையற்ற வியடமாம், ஆனால் அந்த விழாவில் பங்கு பற்றாது ஊரவர், தெரிந்தவர்கள் எல்லோரையும் அழைத்து வந்து கௌரவித்தது மட்டும் தேவையான வியடம்.

ஒரு நிகழ்வை நடாத்த ஒரு அமைப்பாளர் வேண்டும். அனால் அப்படிப் பலர் பல கோணங்களில் நின்றதே இந்தக் குளறுபடிக்கு முழுக்காரணம். கலைஞர்களை மதிக்க தெரியாவிடில் அவர்களை அழைத்திருக்கக் கூடாது. பாடசாலை விழா இப்படி விழாக்கள் நடாத்தினால் பாடசாலை வளராது. நடாத்தியவரகளின் பந்தா தான் வளரும். அதுவும் அடுத்தவர் பணத்தில்.

சில ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிர்மலராஜனை யாரும் மறந்திருக்க மாட்டிர்கள். இவரது ஏழைக் குடும்பத்திற்கு உதவ கனடாவில் பல ஆயிரம் டொலர்கள் சேர்க்கப்பட்டது. சேர்த்த பணத்தில் ரிக்கற் போட்டு இலங்கைக்குச் சென்று ஆடம்பரமாக செலவு செய்த பின்னர் நிர்மலராஜனின்ன வயோதிபத் தந்தையிடம் கொடுத்தது வெறும் 50,000 ரூபாய் மட்டுமே. அந்தத் தந்தை ஆத்திரம் தங்க முடியாது

(தொடர்ச்சி 5ம் பத்தியில்)

## பந்தா... (தொடர்ச்சி)

அந்தப் பணத்தை வாங்க மறுத்துவிட்டார். அது மட்டுமல்ல தன் மகனை வைத்து வியாபாரம் செய்வதையும் நிறுத்தும் படி கேட்டுக் கொண்டார். அந்தத் தந்தையும் இந்த சாவகச்சேரி இந்துவும் ஒரே தளத்தில் தான் நிற்கின்றனர்.

நூற்றாண்டு விழா நன்கு நடைபெற வேண்டும் என்ற நல்ல நோக்கம் சிலர் மனதில் இருந்தாலும் பந்தா காட்டுபவர்கள் பலரின் கடின உழைப்பு சாவகச்சேரி இந்துவிற்கு இருந்த நல்ல பெயரில் கறையை ஏற்படுத்தி உள்ளது. இந்த பந்தா காட்டியர்கள் தயவு செய்து ஒரு தரம் அங்கு போய் பாருங்கள். நீங்கள் வீணே விரயம் செய்த பணம் எந்த வகையில் அங்கு உதவியிருக்கும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். உங்கள் பாடசலை பெரிதாக பாதிக்கப்படா விட்டாலும் இங்கு தரை மட்டமான ஒரு சகோதர பாடசலைக்காவது கொடுக்கலாம் தானே. நாமே நின்று முழுக்கடமைகளையும் நாமே செய்தால் அதில் வரும் திருப்தி இந்த பண உதவியை விட மேலானது. அதில் ஒரு அர்தமும் உள்ளது.

# வீட்டு முகவர்களின் கொள்ளையடிப்புகள்

வீட்டு முகவர்கள் தங்களது வாடிக்கையாளர்களை ஏமாற்றுவதாக குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. வீடு விற்பனை செய்தவர்களில் நாலில் ஒருவர் தாங்கள் செலுத்திய கட்டணத்திற்கு ஏற்ற சேவையைப் பெற முடியவில்லை என தெரிவித்து உள்ளனர். வீட்டு முகவர்கள் செயல்பாடுகளில் கால தாமதமும், தகவல்களை பரிமாறுவதில் ஏழ்மையாகவும் இருப்பதாக Office for Fair Trading - OFT கண்டுள்ளது. முகவரகங்களில் பணி புரியும் அலுவலர்கள் வாங்குபவர்கள் கொடுத்த பெறுமதியை பரிமாறுவதில்லை, தனிப்பட்ட நலன்களை வெளிப்படுத்துவது, வாங்குபவர்களுக்கு வீட்டு நிதிச் சேவைகள் பற்றி தவறான தகவல்களை வழங்குவது போன்ற அம்சங்களையும் OFT சுட்டிக்காட்டி உள்ளது.

சில சமயங்களில் இம்முகவரகங்கள் கேவலமாகவும் நடந்து கொள்வதாக OFT தெரிவிக்கிறது. விற்பனைக்கு வராத வீடுகளில் விற்பனைப் பலகையை நிறுத்துவது, மற்றைய முகவரகங்கள் விற்பனைக்கு விட்ட வீடுகளில் உள்ள விற்பனைப் பலகையை அகற்றுவது, நம்பிக்கையான கொள்வனவாளர்களிடம் இருந்து இலஞ்சம் வாங்குவது என மோசமான செயற்பாடுகளிலும் இம்முகவரகங்கள் ஈடுபடுவது சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

# சிறுபான்மை

## மாணவர்கள் அதிகரிப்பு -8% வெள்ளை இனத்தவர் வீழ்ச்சி

இலண்டனில் உள்ள பள்ளிகளில் பிரித்தானிய வெள்ளையின மாணவர்களிலும் பார்க்க சிறுபான்மையின மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அண்மைய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அதன்படி 1990க்களில் இலண்டனில் வெள்ளையினத்தவர்களின் சனத்தொகை 8 வீதத்தால் வீழ்ச்சி அடைந்து உள்ளது. மேற்கு ஐரோப்பாவில் வேகமாக வளர்ந்து வரும் நகரான இலண்டனுக்கு ஆபிரிக்கா, பங்களாதேஸ், இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து பெரும்தொகையானோர் புலம்பெயர்ந்ததே இந்த மாற்றத்திற்கு காரணம் எனக் கூறப்படுகிறது. நகரத்தின் பன்முகத் தன்மையே, கலாச்சார, பொருளாதார மிளிர்வுக்குக் காரணம் என மேயர் கென் லிவிங்ஸ்டன் தெரிவித்தார்.

# தொழிலாளர் அகிலத்தின் ஒன்றுகூடல்

தொழிலாளர் அகிலத்தின் ஒன்றுகூடல் ஏப்ரல் 17, 24 திகதிகளில் முறையே ஸ்ரட்போர்ட்டிலும் ரூற்றிங்கிலும் நடைபெற்றது. இலங்கையில் நடந்து முடிந்த தேர்தலும் அதில் தொழிலாளர் நலன்களும் என்பது பற்றியதாக இச்சந்திப்பு இடம்பெற்றது. இத்தேர்தலில் தொழிலாளர் நலனுக்கிருந்த சந்தர்ப்பங்கள், சமாதானப் பேச்சுவார்த்தையின் எதிர்காலம், முதலாளித்துவ அரசால் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமா? ஏழைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட வழியுண்டா என்பன பற்றி கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சோசலிசக் கட்சியின் கிழக்கு இலண்டன் தலைவர் மன்னி தைன், வானொலி அறிவிப்பாளர் யமுனா ராஜேந்திரன், தொழிலாளர் அகிலத்தின் சர்வதேசச் செயலாளர் கிளயர் டொய்ல் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

London School of Management & Technology
*Overseas Students & Visitors Welcome*
· Full time courses
· BSc Computer Science
· MSc. Computer Science
· BBA, MBA, LLB, LLM, PhD
· Diploma in Computer Science
· Diploma in Business Administration
**Free visa application assistance provided**
1 The Broadway, Hanwell, London W7 3SS
**Tel: 02088401177 Fax: 02088409911**
E.mail: admin@wlsmt.org.uk
Website:www.wlsmt.org.uk

YAASHIK Motors
* MOT - Diesel & Petrol
* Performance Tuning & Parts
* Mail Order
* Seat, Audi Specialist
* Servicing, Clutches, etc.
**Tel: 020 8998 8900**
Unit 5A, 255 Water Road, Wembley, Middx. HA0 1JW

J.RAJA & Co.
*Chartered Certified Accountants and Registered Auditors*
**Tel: 020 8597 5590**
Fax: 020 8590 5200
We provide
**Auditing, Accounting and Taxation Services for Businesses and Self-Employed Individuals**
962, Eastern Avenue, Newbury Park, Ilford, Essex IG2 7JD
Email: jraja@jraja.co.uk

J K SHAH
Chartered Certified Accountants & Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

MORTGAGE PLUS (London) LTD
Mortgages Tailor-made for You
* Specialist in CCJ/Default Cases
Tel:
020 8571 2570
07710 150713
81, South Road, Southall, Middx.
Your home is at risk if you fail to keep up repayments on loans secured on it.

# இலங்கைத் தமிழர்கள் ஒற்றுமைப்பட தமிழகத் தலைவர்கள் வேண்டுகோள்

விடுதலைப் புலிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதலானது ஆழ்ந்த துயரத்தைத் தருவதாக தமிழக அரசியல் தலைவர்கள் தமது அனுதாபத்தை வெளியிட்டனர். வன்னி, கிழக்குப் புலிகளுக்கு இடையே உட்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த தினங்களில் ப சிதம்பரம், கலைஞர் மு கருணாநிதி ஆகியோர் தமது துயரத்தை வெளிப்படுத்தினர். தமிழக மக்கள் தமிழர்களுக்கிடையில் ஐக்கியத்தை வேண்டி நின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதலானது ஆழ்ந்த துயரத்தைத் தருவதுடன் சமாதானப் பேச்சுகளுக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதென்று முன்னாள் இந்திய மத்திய அமைச்சரும் காங்கிரஸ் ஜனநாயகப்பேரவைத் தலைவருமான ப.சிதம்பரம் தெரிவித்தார். இது பற்றி ப சிதம்பரம் பத்திரிகையாளர்களிடம் கூறுகையில், "இது எனது வாழ்க்கையில் துயரம் மிக்க நாட்களில் ஒன்றாகும். தற்போதைய சூழ்நிலை குறித்து நான் முற்றுமுழுதாக அதிருப்தி அடைந்துள்ளேன். தசாப்தங்கள் நீண்ட இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான திருப்திகரமான சமாதான நடவடிக்கைகள் தீர்வினைப் பெற்றுத்தரும் என்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணத்தில் விடுதலைப் புலிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதலானது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைத் தமிழர்களது நலன்களின் மீது அக்கறையுள்ள அனைவரும் தற்போதைய மோதல்கள் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் விடுதலைப்புலிகள் இடையே ஏற்பட்டுள்ள சகோதர யுத்தம் இதயத்தைத் துளைக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி கூறியுள்ளார். இது தொடர்பாக தி.மு.க. தொண்டர்களுக்கு அவர் எழுதிய கடிதம் வருமாறு:

ஈழத் தமிழர் பிரச்சினையை இந்திய மக்களும் குறிப்பாக தமிழ் மக்களும் அனுதாப உணர்வுடன்தான் அணுகினர். இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் படை வீரர்களாக மாறினர். அப்படி மாறியவர்களுக்கு உள்ளேயே, தமிழ் இனத்துக்கே சிறப்பான உட்பகை தோன்றிடத் தவறவில்லை. அதன் காரணமாகப் போராளிக் குழுக்கள் பல அமைந்தன. இவர்களுக்குள்ளேயே தனித்தனியே ஆயுதப் போர் நடத்தின. அப்போட்டியில் பெருந்தலைகளே பல உருண்டபோது, சகோதர யுத்தத்தை நிறுத்துங்கள் என்று தி.மு.க. சார்பில் வேண்டுகோள் விடுத்தேன்.

மதுரையில் டெசோ மகாநாடு நடத்தி, போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் பிரச்சினைகள் பற்றி விரிவாக விவாதித்தோம். அதற்குப் பிறகும் சகோதர யுத்தம் நிற்கவில்லை. ராஜீவ் காந்தியின் கொடுமையான படுகொலை, ஈழத்தமிழர் உரிமை பெற வேண்டுமென தமிழ் நாட்டு மக்கள் காட்டிய ஆர்வத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்தது.

எத்தனையோ அரசியல் மாற்றங்களுக்கிடையே நோர்வேயின் முயற்சியால் சிங்கள அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே அமைதிக்கான பேச்சுவார்த்தை நடந்தது. அதில் படிப்படியான முன்னேற்றமும் ஏற்பட்டது. இருள் விலகாதா என எதிர்பார்த்திருக்கும் போது திடுமென ஒரு மின்னல் கீற்று கண்ணைப் பறித்தது போல புலிப் போராளிகளுக்கிடையே கருணா விவகாரம் வெடித்தது.

பாரதி பாடியது போல தமிழ் சாதியின் விதி என்று தான் இதை வேதனையுடன் நோக்க வேண்டியுள்ளது. இப்போது போராளிகளுக்குள்ளேயே போர் மூண்டுள்ளது. இந்த வகையான சகோதர யுத்தம் முடிவடையும் வரையில் சமாதானமாகவும், சந்தோசமாகவும் சஞ்சலம் துளியும் இல்லாமலும் தமிழ் இனத்தவர் வாழ்வதற்கு வழி வகை ஏது? இந்த ஏக்கம் நம் இதயத்தை அல்லவா துளைக்கிறது.

என்று தனது மனக்கிடக்கையை கலைஞர் வெளிப்படுத்தி இருந்தார்.

# தோழர் சண்முகதாசன் : ஒரு பார்வை - எழுதுபவர் : த ஜெயபாலன்

பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர அரசியல் முன்னோடியான என் சண்முகதாசனின் நூல் அறிமுக விழா அவரது உயிர் பிரிந்த இந்த பிரித்தானிய மண்ணில் நிகழ்வதும் அவரது நினைவுகள் இங்கு மீட்கப்படுவதும் பொருத்தமானதே. தோழர் சண்முகதாசன் அன்று கூறிவிட்டுச் சென்ற அரசியல் தீர்க்கதரிசனங்கள் இன்று நிஜமாகி உள்ளது. இன்றைய அரசியல் சூழலில் ஒரு அரசியல் தீர்க்கதரிசியையும் அந்த தீர்க்கமான அரசியல் சிந்தனையையும் சீர்தூக்கிப் பார்க்க இந்நினைவு நிகழ்வும் இச்சிறு கை நூலும் எமக்கு ஓரளவுக்கு உதவும் என்று நம்புகிறேன்.

தோழர் சண்முகதாசன் இலங்கையில் கம்யுனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவர் மட்டுமல்ல இலங்கையில் வாழ்ந்த ஒரு அரசியல் தீர்க்கதரசியுமாவார். அவர் மறைந்து பத்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவர் முன்வைத்த கருத்துக்களும் அவர் வெளிப்படுத்திய சிந்தனைகளும் சாகாவரம் பெற்றுள்ளன. நான் ஒரு மார்க்சிய புத்திஜீவி அல்ல. ஒரு மாணவன் மட்டுமே. தோழர் சண் என்று அன்புடன் அழைக்கப்படும் நாகலிங்கம் சண்முகதாசன் அவர்களை அவரது நூல்களுக்கூடாகவும் (நூல்கள் : கார்ள் மார்க்சின் வாழ்வும் போதனைகளும், சண்முகதாசனின் கட்டுரைகள்) அந்நூல்களுக்கு வழங்கப்பட்ட பதிப்புரைகளினூடாகவுமே அறிந்து கொண்டேன். இந்நிகழ்வை ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற விருப்பு அப்போதே உருவானது. இந்நிகழ்வை மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்துடன் இணைந்து நடாத்துவதில் தேசம் சஞ்சிகை பெருமை அடைவதுடன் ஒரு வரலாற்றுக் கடைமையைச் செய்த திருப்தியும் ஏற்படுகிறது.

தமிழ் மக்களின் கால் நூற்றாண்டு கால விடுதலைப் போராட்டம் இன்னமும் பண்பு மாற்றம் ஒன்றுக்கு தயாரானதாகத் தெரியவில்லை. இன, மத, சாதிய, பிரதேச் வேறுபாடுகளால் இலங்கை மக்கள் இன்னமும் பிளவுண்டு போயுள்ளனர் போராட்டத்தின் நேசசக்திகள் யார்? எதிரிகள் யார்? என்ற அடிப்படையான அம்சங்கள் கூட இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. இதற்கு காரணம் தோழர் சண் குறிப்பிட்டது போல "சரியான தத்துவார்த்த வழிகாட்டல் இல்லாமல் ஒரு கட்சியோ ஒரு இயக்கமோ ஒரு அடிதானும் முன்னுக்கு வைக்க முடியாது" என்பதாகத்தான் இருக்க முடியும். "ஒன்றுபடுத்தக்கூடிய சக்திகளை ஒன்றுபடுத்தவும் எதிரியாகிய ஏகாதிபத்திய - மேலாதிக்க சக்திகளையும் அவர்களுக்கு உடந்தையான உள்ளூர்ப் பிற்போக்கு சக்திகளையும் தனிமைப்படுத்தவும் வேண்டிய கடமை முதன்மையானது. இதையும் ஒரு சரியான தத்துவார்த்த வழிகாட்டலின் மூலமே முன்னெடுக்க இயலும்" என்று தோழர் சண் போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் குறிப்பிட்டது கால்நூற்றாண்டுகளின் கடைப்பிடிக்கப்படாதது எமது போராட்டத்தின் அரசியல் வறுமையே. தோழர் சண் போன்ற தலைவர்கள் இன்று எம்மத்தியில் இல்லாதது மிகவும் வேதனையானது.

தோழர் சண் இனப்பிரச்சனைக்கான தீர்வு பற்றிக் குறிப்பிடுகையில் "இலங்கை அரசாங்கமும் சிங்களப் பேரினவாத சக்திகளும் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்ற உண்மையையும் அதனால் அவர்களுக்கு சுயநிர்ணயத்துக்கான உரிமை உண்டு என்பதையும் ஏற்க மறுக்கின்றமையே இனநெருக்கடிக்குத் தீர்வு காணமுடியாமல் இருப்பதற்கான பிரதான காரணம்" என்று குறிப்பிட்டு இருந்தார். ஒரு தசாப்தத்திற்கு முன்னர் அவர் சுட்டிக்காட்டியதை இன்று சர்வதேசம் சுட்டிக்காட்டுகிறது. "இந்த உரிமை ஏற்கப்பட்டு, ஒப்புக் கொள்ளப்படாமல், இன்றைய தமிழர் பிரச்சனைக்கு எந்தத் தீர்வும் காண முடியாது." என்பது அவர் மறைந்து 10 ஆண்டுகளுக்குப் பின் இன்று தடைப்பட்டு நிற்கும் பேச்சுவார்த்தையில் வெளிப்பட்டு உள்ளது.

